வார இதழ்

# தேசியம்

THESIYAM තේසියම්

www.thesiyamnews.com

இதழ் - 5 | 23.06.2023 - 29.06.2023 | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12 | விலை : ரூ.50.00










# பாரதக் கதையில் பஞ்ச பாண்டவர்!

# மூத்தவர் அருகில் நான்கு தம்பிகள்!!

# கூட்டமைப்பிலும் ஐந்து தலைவர்கள்!!!

## அனைவரும் ஓர் நிலை ! அனைத்திலும் ஒரே நிறை!!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்திற்கு, அதன் அங்கத்துவக் கட்சிகள் ஐந்தினதும் தலைவர்களை ஏகமனதாக தெரிவு செய்ததன் மூலம், ஒரு புதிய அரசியல் கலாச்சாரத்திற்கு அடி கோலப்பட்டிருக்கின்றது.

கடந்த 18 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரில் நிகழ்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில், இந்த தலைமைத்துவ நியமனம் மேற்கொள்ளப்பட்டு, அது தொடர்பான அறிவிப்பும் விடுக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளான தமிழ் ஈழ விடுதலை இயக்கம், (ரெலோ) தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், (புளொற்) ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, (ஈ.பி.ஆர். எல். எப்) தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பனவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் இந்த முடிவு சுமுகமாக எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் செயற்பட்டு கொண்டிருக்கும் 10 அரசியல் கட்சிகள், கிட்டத்தட்ட ஒரே குறிக்கோளையே தமது அரசியல் இலக்காக கொண்டிருந்தாலும், ஓரணியாக ஒன்றுபட முடியாமல், அவை பிரிந்து நின்று கொண்டிருப்பதே, தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில், நீண்ட கால அரசியல் குறைபாடாகவும், முறையீடாகவும் இருந்து வந்திருக்கின்றது.


ஒற்றுமையீனம் என்பதே தமிழ்த் தேசத்தை பலவீனமான நிலைக்கு இன்று தள்ளி இருக்கின்றது என்னும் உறுத்தும் உண்மை, தமிழ் மக்களின் நலன்களை விரும்பும் வெளியுலக, நேச சக்திகளால் அடிக்கடி சுட்டிக்காட்டப்பட்டிருகின்றது.

இந்த நிலையில், கடந்த வருட இறுதியில், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் மூன்று தமிழ்க் கட்சிகளான தமிழரசுக் கட்சி, ரெலோ மற்றும் புளொற் உள்ளடங்கிய கூட்டணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓர் அரசியல் நெருக்கடியை சந்தித்தது.

மிகுதி 9ம் பக்கம் பார்க்க...



தேசியம்
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



## நீட்டப்படும் நேசக்கரம் பற்றிக் கொள்ளப்படுமா? அல்லது தட்டி விடப்படுமா?

**அரசியல் சாசனத்தின் 13ஆவது திருத்தம் தொடர்பில், மீண்டும் இந்திய பிரதமர் மோடியின் கவனத்தை ஈர்க்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்துள்ளது.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் 21ம் தேதி இந்தியத் தலைநகர் புதுடெல்லி சென்று இந்திய பிரதமரை சந்தித்து பேச உள்ள நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

13வது திருத்தத்தை, அதன் மூல வடிவில் முழுமையாக இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்திட, இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் முன் வைத்தே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்திய பிரதமருக்கு எழுத்து மூல வேண்டுகோளை சமர்ப்பிப்பதற்கு தீர்மானித்துள்ளது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவுதான் 13வது திருத்தம். தமிழ்த் தேசத்தின் அரசியல் அபிலாசைகளை அது முழுமையாக திருப்திப்படுத்திடவில்லை என்றாலும், அந்த இலக்கை நோக்கிய அரசியல் பயணத்தில் ஓர் அர்த்தபூர்வமான ஆரம்பமாக அது இருக்க முடியும்.

அந்த அடிப்படையில் தான், தமிழத் தேசத்தின் நீண்டகால விடுதலைப் போராட்டத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ளப்பட்டதும், அரசியல் சட்ட ரீதியாக மேற்கொள்ளப்பட்டிருப்பதுமான ஓர் அரசியல் - நிர்வாக ஏற்பாடு என்ற முறையில், நெருக்கடி மிகுந்த இன்றைய அரசியற் சூழ்நிலையில், 13வது திருத்தத்தின் முழுமையான நடைமுறைப்படுத்தலுக்கு இந்தியப் பங்களிப்பைக்கோரி, தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்தியப் பிரதமருக்கு கூட்டானதோர் கடிதத்தை சென்ற வருடம் எழுதியிருந்தன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற பெயரில் இயங்கும் தமிழ் காங்கிரஸ் தவிர, இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழ்த் தேசிய அபிலாசைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளும் அதில் கையெழுத்து இட்டிருந்தன. இப்பொழுது இலங்கை ஜனாதிபதி இந்தியா செல்ல உள்ள நிலையில், அந்த வேண்டுகோள் மீண்டும் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

இந்த அரசியல் நடவடிக்கைகளில் இணைந்து கொள்ள - கடந்த முறை போல - முன்வருமாறு தமிழரசுக் கட்சிக்கும், விக்கினேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்க அழைப்பு விடுத்துள்ளது.

கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால், தமிழ் தேசியக் கட்சிகளின் - தமிழ்க் காங்கிரஸ் தவிர - ஒன்றுபட்ட ஒரு கோரிக்கையை இந்திய அரசாங்கத்திடமும், அதன் தலைவரான இந்திய பிரதமரிடமும் மீண்டும் சமர்ப்பித்து, ஆவன செய்திடக்கோரும் இந்த அரசியல் நட வடிக்கையில் இணைந்து கொள்ள தமிழரசுக் கட்சியும் தமிழ் மக்கள் கூட்டணியும் பொறுப்புக் கொண்டுள்ளன.

இது, எமது மக்களின் இன்றைய இக்கட்டான நிலையில் விடுக்கப்படும் ஒற்றைக் கோரிக்கையின் பேரிலான வேண்டுகோள். இந்த வேண்டுகோளினை முன்வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீட்டும் நேசக்கரத்தை தமிழரசுக் கட்சியும், தமிழ் மக்கள் கூட்டணியும் பற்றிக்கொள்ளுமா? அல்லது தட்டி விடுமா?

**தமிழ் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.**

**ஆசிரியர்**

## ஈழத் தமிழர்களின் சுய நிர்ணய உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## டேவிட் ஷீபிரிட்ஜ் வலியுறுத்தல்



ஈழத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக திட்டமிட்டு ஒடுக்கு முறைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்திருக்கும் ஆஸ்திரேலியா பாராளுமன்ற உறுப்பினர் டேவிட் ஷீபிரிட்ஜ் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை மற்றும் பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை தமிழ் அகதிகளை பிரதிநிதித்துவப்படுத்தி ஆஸ்திரேலியாவின் மெல்பேன் நகரை தளமாகக் கொண்டு இயங்கி வரும் தமிழ் ஏதிலிகள் கழகத்தின் கிளை அலுவலகம் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் சிட்னி நகரில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஆஸ்திரேலியா பாராளுமன்ற உறுப்பினர் டேவிட் ஷீபிரிட்ஜ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம் பெற்ற முள்ளிவாய்க்கால் படுகொலையில் பெரும் எண்ணிக்கையிலான தமிழ் மக்கள் கொல்லப்பட்டு கடந்த மாதத்துடன் 14 வருடங்கள் பூர்த்தி அடைந்திருக்கும் நிலையில், சிட்னியில் தமிழ் ஏதிலிகள் கழகத்தின் கிளை அலுவலகத்தை திறந்து வைப்பது மிகுந்த முக்கியத்துவம் பெறுவதாக அவர் சுட்டிக் காட்டி உள்ளார்.

இருப்பினும் இனப்படுகொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய எவரும் இன்னமும் பொறுப்பு கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை என்றும், மாறாக அவ்வாறு குற்றஞ்சாட்டப் பட்டவர்களில் பலர் தற்போது அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகிக்கின்றனர் என்றும், டேவிட் ஷீபிரிட்ஜ் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தற்போது தமிழ் மக்களுக்கு எதிராக திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டு வரும் ஒடுக்கு முறைகளையும், அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் போராட்டத்தின் மீதான அத்துமீறல்களையும் கடுமையாக கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ள அவர், தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை மற்றும் பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தியுள்ளார்.

## கூட்டமைப்பின் பொதுச்செயலாளராக ராகவன்! பொருளாளராக துளசி! தேசிய அமைப்பாளராக ஜனா!

## ஊடகப் பேச்சாளராக சுரேஷ் பிரேமச்சந்திரன்!!



கடந்த 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிறைவேற்றுக் குழு கூட்டத்தில், பொதுச்செயலாளராக ஆர்.ஆர். என்று அரசியல் வட்டாரங்களில் அழைக்கப்படும், ஆர்.ராகவன் ஏகமானதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். தனது இளமைப்பருவத்தில் இருந்து புளொற் இயக்கத்தில் ஒரு தீவிர செயற்பாட்டாளராக இயங்கிவந்திருக்கும் ராகவன், 40 வருடங்களுக்கு மேலான, நீண்ட அரசியல் அனுபவம் கொண்டவர் என்பதோடு, புளொற் இயக்கத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தனின் மிக நெருங்கிய அரசியல் சகாக்களில் ஒருவருமாவார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொருளாளராக, ஜனநாயகப் போராளிகள் கட்சியைச் சேர்ந்த க.துளசி தெரிவானார். சிறந்த அரசியல் பேச்சாளரான துளசி, கட்சியின் ஊடகப் பேச்சாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

மட்டகளப்பு பாராளுமன்ற உறுப்பினரும், ரெலோ இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான ஜனா கருணாகரம் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளராக தெரிவு செய்யப்பட்ட அதே வேளையில், ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் ஊடகப் பேச்சாளராக தெரிவானார்.

கூட்டமைப்பின் இணைத்தலைவர்கள் ஐவரில் ஒருவரான சுரேஷ் பிறேமச்சந்திரன், அதற்கு மேலதிகமாக ஊடகப் பேச்சாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டமைப்பின் இணைச்செயலாளர்களாக, ஆகக் குறைந்தது அறுவர், பல்வேறு துறைகளுக்குமாக நியமிக்கப்படவுள்ள சூழ்நிலையில், அந்தத் தெரிவுகள் அனைத்தும் அடுத்த மாதம் 9ம் திகதி நிகழவுள்ள கூட்டமைப்பின் நிறைவேற்றுக் குழு கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழர் தாயகத்தின் நிலப்பரப்பு தொடர்ச்சியை நிரூபித்து நிற்கும்

## கதிர்காம பாத யாத்திரை



ஒவ்வொரு வருடத்திலும் ஆனி மாதம் இடம் பெறும் கதிர்காமக்கந்தன் உற்சவத்திற்கு, தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் பாதயாத்திரையாக செல்வது வரலாற்று ரீதியான வழக்கமாகும்.

30 வருடகால போரின் போது, தற்காலிக சமாதானம் நிலவிய ஒரு சில சந்தர்ப்பங்களைத் தவிர, இந்த பாதயாத்திரை முற்றாகவே தடைப்பட்டிருந்தது.

2009 இல் யுத்தம் முடிவடைந்ததை தொடர்ந்து, அடுத்து வந்த சில வருடங்களில், மீண்டும் பாதயாத்திரை ஆரம்பிக்கப்பட்டு, சமீப காலத்தில் முழுவீச்சுடன் வருடாவருடம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.


தமிழர் தாயகத்தின் வட,கிழக்கு மூலையில், வல்வெட்டித்துறையை அடுத்துள்ள தொண்டமானாற்றில் அமைந்துள்ள வரலாற்றுப் புகழ் பெற்ற செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்தும், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இருந்தும் ஆரம்பமாகும் இந்த பாதயாத்திரைகளில் கலந்து கொள்ளும் பக்தர்கள், தமிழர் தாயகத்தின் தென் எல்லைப் பிரதேசமான அம்பாறை மாவட்டத்தில் அமைந்திருக்கும் புகழ்பூத்த உகந்தை முருகன் ஆலயத்தை அடைந்து, அங்கு தங்கி இளைப்பாறி, வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர், யானைகள் பெருமளவில் நடமாடும் அடர்ந்த காட்டு பிரதேசத்தில் பல மைல்கள் நடந்து சென்று, கதிர்காமத்தை அடைவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

இந்த யாத்திரைகள் எல்லாம், வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழர் தாயகத்தின் நிலப்பரப்பு தொடர்ச்சி என்பது, இலங்கை தீவில் 2000 ஆண்டுகளுக்கு மேலாக நிலைகொண்டு நிற்கும் தமிழர் தாயகக் கோட்பாட்டின் வரலாற்று அடிப்படை என்பதை எடுத்துரைத்து நிற்கின்றன.

இந்த பின்புலத்தில், கதிர்காம யாத்திரையில் இந்த வருடமும் இந்துமதம் சார்ந்த தமிழ் மக்கள் பல்வேறு கஷ்டங்கள் மற்றும் இடர்களுக்கு நடுவிலும் ஆதித் தமிழ்க் கடவுள் என்று வர்ணிக்கப்படும் முருகனை தரிசிக்க ஆயிரக்கணக்கில் திரண்டுள்ளனர்.

உகந்தை முருகன் ஆலயத்துக்கு அப்பால் உள்ள காட்டுப் பாதையின் கதவுகள், கதிர்காமம் நோக்கிய பாத யாத்திரைக்காக கடந்த 12 ம் திகதி திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டபோது, அங்கு திரண்டிருந்த பக்தர்களோடு கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுனர் செந்தில் தொண்டமானும் அந்நிகழ்வில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.












நிலாந்தன்

# பரீட்சை எழுதிய பிள்ளைகள் செய்த குழப்படி!!

அண்மையில் ஓ/எல் பரீட்சை எழுதிய மாணவர்கள் பரீட்சைகள் முடிந்த கடைசி நாளன்று வகுப்பறைகளிலும் வகுப்புக்கு வெளியேயும் அட்டகாசம் செய்ததாக சில ஒளிப்படங்கள் வெளியாகின. இந்த ஒளிப்படங்களை வைத்து மூன்று விதமான கருத்துக்கள் கூறப்பட்டன. முதலாவது, சில மாணவர்கள் செய்த குழப்படிகளுக்காக எல்லா மாணவர்களையும் குற்றங் கூறக்கூடாது என்று. இரண்டாவது, அந்த வயதுக்கு அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள். அவர்கள் அந்த மகிழ்ச்சியை அனுபவிக்க விடுங்கள் என்பது. மூன்றாவது, ஆசிரியர்களின் கைகளில் இருந்து பிரம்பு பறிக்கப்பட்டதால் மாணவர்கள் தறிகெட்டுப் போய்விட்டார்கள் என்ற குற்றச்சாட்டு.

> “பாராளுமன்றத்தினுள் மிளகாய்த் தூள் வீசி சண்டையிடுகின்றனர், கதிரைகளை வீசி எறிந்து சண்டையிடுகின்றனர், இவற்றை முன்னுதாரணமாக கொண்டே மாணவர்களும் செயற்படுவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கருத்துத் தெரிவித்துள்ளார்.”

பரீட்சை முடிந்த கடைசி நாளைக் கொண்டாடுவது என்பது ஒரு பொதுவான மாணவ உளவியல். அதை எப்படிக் கொண்டாடுகிறார்கள் என்பதுதான் இங்கு பிரச்சனை. இதை இரண்டு விடயங்கள் தீர்மானிக்கின்றன. ஒன்று பரீட்சை எத்தகையது என்பது. அல்லது கல்வி முறை அல்லது கல்விச் சூழல் எத்தகையது என்பது. இரண்டாவது மாணவர்களுக்கு யார் முன்மாதிரிகள் என்பது.

முதலாவதாக கல்விச் சூழல் பற்றிப் பார்க்கலாம். இலங்கைத் தீவு அதன் இலவச கல்வியைக் குறித்து பெருமைப்பட்டுக் கொண்டாலும், நடைமுறையில் போட்டிப் பரீட்சையானது தனியார் கல்வியை ஊக்குவிக்கிறது. அண்மையில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி “எமது பிள்ளைகள் இலவசக் கல்வியை முழுமையாக அனுபவிக்கின்றனர் என்று அரசாங்கம் கூறினாலும் அது பெரும் பொய்” என்று கூறியிருக்கிறார். ”நாட்டில் மாணவர்கள் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைவது இலவசக் கல்வியினால் அல்ல, தனியார் பணத்தினால்” என்றுமவர் கூறியுள்ளார்.

போட்டிப் பரீட்சையானது சிறுபிராயமிருந்தே பிள்ளைகளுக்கு இடையே போட்டி உணர்வை பொறாமை உணர்வை சுயநலத்தை வளர்க்கின்றது. இதன் விளைவாக இலவசக் கல்வியின் உன்னதங்கள் பிரகாசமிழந்து விட்டன. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை எனப்படுவது பிள்ளைகளுக்கானது என்பதை விடவும் நடைமுறையில் பெற்றோர்களுக்கு உரியதாகவே காணப்படுகின்றது. ஐந்தாம் ஆண்டுப் பிள்ளையைக் கசக்கிப்பிழியும் அந்தப் பரீட்சையை அகற்றுமாறு பெரும்பாலான கல்வி உளவியலாளர்களும் மருத்துவர்களும் எப்பொழுதோ சொல்லிவிட்டார்கள். ஆனால் நாடு இன்றுவரை அதைக் கைவிடத் தயாரில்லை. அதற்கு மாற்று ஏற்பாட்டைக் கண்டு பிடிக்கவும் தயாரில்லை.

ஐந்தாம் ஆண்டிலிருந்து பிள்ளையை கசக்கிப் பிழியத் தொடங்கும் ஒரு கல்வி முறையானது ஓஎல் பரீட்சையின்போது பிள்ளைக்குச் சித்திரவதையாக மாறுகிறது. கல்வி சுமையாக, சித்திரவதையாக மாறும்பொழுது பரீட்சை ஒரு தத்தாக மாறுகின்றது. அந்தப் பரீட்சையை எழுதிக் கடந்த பிள்ளை அந்த மகிழ்ச்சியை கொண்டாடுந்தானே? ஆனால் அது எப்படிக் கொண்டாடுகிறது என்பதுதான் பிரச்சினை.

“பாராளுமன்றத்தினுள் மிளகாய்த் தூள் வீசி சண்டையிடுகின்றனர், கதிரைகளை வீசி எறிந்து சண்டையிடுகின்றனர், இவற்றை முன்னுதாரணமாக கொண்டே மாணவர்களும் செயற்படுவதாக” இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அதுதான் உண்மை. மாணவர்களுக்கு முன்மாதிரிகள் குறைந்துவிட்டன. போட்டிப் பரீட்சையானது பாடசாலையின் பெறுமதியைக் குறைத்துவிட்டது. ஆளுமையை உருவாக்கும் பள்ளிக்கூடம் தனியார் கல்வி நிறுவனங்களோடு ஒப்பிடுகையில் சந்தைப் பெறுமதியை இழந்துவிட்டது. அதே சமயம், தனியார் கல்வி நிறுவனங்கள் பிள்ளைகளைப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் எந்திரங்களாக அல்லது பந்தயத்துக்கு குதிரைகளைத் தயார்படுத்தும் பயிற்சி நிலையங்கள் ஆகவே காணப்படுகின்றன.

பந்தயக் குதிரைக்கு அல்லது சவாரி மாட்டுக்கு எதைக் கொடுத்தாவது எதைச் செய்தாவது வேகமாக ஓடவைக்க வேண்டும் என்ற மனோநிலையோடு அணுகும் பயிற்சியாளராக ஆசிரியர்கள் மாறுகிறார்கள். ஓ/எல் பரீட்சை முடிந்தபின் அந்த மகிழ்ச்சியை கொண்டாடிய மாணவர்களைக் குறித்து விமர்சிக்கும் பலரும் அந்த பரீட்சை முடிந்த அடுத்தடுத்த நாளில் ஏ/எல்.பாடங்களுக்கான தனியார் வகுப்புகள் தொடங்கியதைப்பற்றி விமர்சித்திருக்கிறார்களா?

ஒரு பரீட்சை முடிந்த கையோடு அடுத்த கட்டப் பாடங்களை தொடங்க வேண்டிய தேவை என்ன? யார் முந்தித் தொடங்குவது என்ற போட்டிதானே காரணம்? இந்தப் போட்டி காரணமாக பிள்ளை அதன் ஓய்வை இழக்கின்றது. நவீன கல்வியில் ஓய்வும் படிப்பின் ஒரு பகுதி. ஆனால் பரீட்சை முடிந்த கையோடு பிள்ளை அடுத்த பந்தயத்துக்கு தயாராகின்றது. இது பிள்ளையின் உளவியலை எப்படிப் பாதிக்கும்?

இந்த விடயத்தில் கல்முனை பிரதேச சபை ஒரு நடவடிக்கை எடுத்திருக்கிறது. தனியார் கல்வி நிறுவனங்கள் 2025 ஆம் ஆண்டுக்குரிய ஏ/எல் பாடங்களை இம்மாதம் இறுதிவரை ஆரம்பிக்க வேண்டாம் என்று கல்முனை மாநகர சபை ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார்.

அந்த முன்மாதிரியை ஏன் ஏனைய உள்ளூராட்சி சபைகளும் பின்பற்றக் கூடாது? அண்மையில் யாழ் மாவட்டச் செயலர் தனியார் கல்வி நிறுவனங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தார். ஆனால் அதுகூட ஒன்பதாம் ஆண்டுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்குத்தான். அப்படியென்றால் 9 ஆம் ஆண்டுக்கு மேற்பட்ட பிள்ளைகள் பந்தய குதிரைகளாக்கப்படுவது மறைமுகமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறதா? ஆம். அதைத் தடுக்கமுடியாத ஒரு சமூகச்சூழலே காணப்படுகின்றது. ஏனென்றால் போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற வேண்டும் என்ற வெறி பெற்றோருக்கும் அதிகம்.

இது சமூகத்தின் கல்வி பற்றிய கருதுகோள்களினால் தீர்மானிக்கப்படுகிறது. குறிப்பாக விஞ்ஞான, கணிதப் பிரிவுகளுக்குரிய பிள்ளைகளைப் பொறுத்தவரை வாழ்க்கையை வெறுத்து படிக்க வேண்டும் என்று பெற்றோரும் கருதுகிறார்கள் ஆசிரியர்களும் கருதுகிறார்கள். சிறந்த பெறுபேறுகளுக்காக எதையும் பலியிடலாம் என்ற மனோநிலை ஊக்குவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஏ/எல் பாடங்களைப் படிப்பிக்கும் தனியார் கல்வி நிறுவனங்களில் எத்தனை உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வகுப்பறை வசதிகளைக் கொண்டிருக்கின்றன? சில தனியார் கல்வி நிறுவனங்கள் தங்களைக் கண்டிப்பானவைகளாகக் காட்டிக்கொள்ள ஒழுக்கத்திலும் பெண் பிள்ளைகளின் விடயத்திலும் கிட்டத்தட்ட தாலிபான்களைப் போலவே நடந்து கொள்கின்றன.ஆனால் அங்கே நூற்றுக்கணக்கில் பிள்ளைகள் ஒன்றாக இருந்து படிப்பார்கள். அது உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வகுப்பறை ஒழுங்குகளுக்கு எதிரானது. ஒரு வகுப்பறையில் எத்தனை பேர் இருக்கலாம் என்று ஒரு அளவு உண்டு. ஆனால் பெரும்பாலான தனியார் கல்வி நிறுவனங்களில் நூற்றுக்கணக்கான பிள்ளைகள் ஒன்றாக இருந்து கல்வி கற்கின்றார்கள். ஒருவர் மற்றவரோடு முட்டியபடி இருக்க வேண்டும். முதுகை சாய்க்க முடியாது. புத்தகப் பையை வைக்க இடம் கிடையாது” போன்ற முறைப்பாடுகள் உண்டு.

சில தனியார் கல்வி ஆசிரியர்கள் பிள்ளைகளை நூற்றுக்கணக்கான பிள்ளைகளுக்கு முன் பகிரங்கமாகத் தண்டிக்கிறார்கள்.இது கல்வி உளவியலுக்கு முரணானது. பிள்ளையின் குறைந்த புள்ளிகளை சுட்டிக்காட்டி அவமதிப்பது பிள்ளையை வகுப்பை விட்டு துரத்துவது போன்ற பகிரங்க தண்டனை முறைகள் உண்டு. இவையனைத்தும் மனிதஉரிமை மீறல் குற்றச்சாட்டுகள். இதையே பாடசாலை செய்தால் அதற்கு நீதிமன்றம்வரை போகும் சமூகம், தனியார் கல்வி நிறுவனங்களில் நிகழும் இவ்வாறான பகிரங்கத் தண்டனைகளைக் குறித்து அலட்டிக்கொள்வதில்லை. ஏனென்றால் சிறந்த பெறுபேறுகளுக்காக மனித உரிமைகள் பலியிடப்படுவதை ஏற்றுக் கொள்ளும் ஒரு சமூகமாக நாம் எப்பொழுதோ மாறிவிட்டோம். அங்கிருந்தும் தொடங்குகின்றது வன்முறை.

சிறந்த பெறுபேறுகளுக்காக உயர்தரத்தில் ஒரு பாடத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களிடம் செல்லும் போக்கு அதிகரித்து வருகிறது. இதனால் பிள்ளைகள் சுயமாகக் கற்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. சுயகற்றலை ஊக்குவிக்காத கல்வி முறை பிள்ளைகளை எங்கே கொண்டு போய் விடும்? சமூகத்தை எங்கே கொண்டு போய் விடும் ?

கடந்த ஆண்டு ஓ/எல் பரீட்சை முடிவுகள் வெளிவந்த பொழுது பிள்ளைகள் அதிகம் சுயமாகக் கற்றிருக்கிறார்கள் என்று சுட்டிக் காட்டப்பட்டது. பெருந்தொற்று நோய் காரணமாக பிள்ளைகள் வீடுகளில் முடங்க வேண்டி இருந்தபடியால் அவர்கள் சுயமாக கற்கவேண்டிய ஒரு சூழல் ஏற்பட்டது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. அதே சமயம் மாணவர்கள் மத்தியில் ஒரு கூட்டுஅபிப்பிராயம் உண்டு. பாடசாலைக்குப் போகும் நேரத்தைக் குறைத்தால் வீட்டிலிருந்து அதிகமாகப் படிக்கலாம் என்பதே அது. அதாவது தனியார் கல்வி நிறுவனங்களுக்கு போகும் நேரத்தை குறைக்க அவர்கள் தயாரில்லை. மாறாக பள்ளிக்கூடத்துக்குப் போகும் நேரத்தைக் குறைத்தால் கூடுதலாகப் படிக்கலாம் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

போட்டிப் பரீட்சையானது பாடசாலையின் சந்தைப் பெறுமதியைக் குறைத்து விட்டது. ஆசிரிய-மாணவ உறவின் மகிமையைக் குறைத்துவிட்டது. பிள்ளைகளைத் தறுக்கணிக்க வைக்கின்றது. பிள்ளைகளுக்கு இடையே போட்டி பொறாமை போன்றவற்றை ஊக்குவிக்கின்றது. பொதுநலத்தை விடவும் சுயநலத்தை ஊக்குவிக்கிறது.அதன் விளைவாக யாருக்கும் பயப்படாத் யாரையும் மதிக்காத் எதையும் புனிதமாகக் கருதாத ஒரு போக்கு பிள்ளைகள் மத்தியில் வளர்ந்து வருகிறது.

எனவே மாணவர்கள் தறிகெட்டு போகின்றார்கள் என்று சொன்னால் அதற்கு அந்தச் சின்னப் பிள்ளைகள் மட்டும் பொறுப்பில்லை. முழுச்சமூகமும் பொறுப்பேற்க வேண்டும். முழு நாடும் பொறுப்பேற்க வேண்டும். முதலாவதாக கல்வி முறைமைதான் குற்றவாளி. அந்த கல்விமுறையின் கைதிகளாக அல்லது கருவிகளாக காணப்படும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் பெரிய புரட்சிகரமான மாற்றம் எதையும் செய்துவிட முடியாது.தன் சொந்தப் பிள்ளையின் விடயத்தில் வேண்டுமென்றால் பெற்றோர் ரிஸ்க் எடுக்கலாம். ஒரு முறைமைக்கு எதிராக பிள்ளையைச் செதுக்குவதில் சவால்கள் உண்டு. ஆனால் அதைவிட வேறு வழியில்லை. ஏனென்றால் இந்தக் கேடு கெட்ட நாடு போட்டிக் கல்விமூலம் உருவாக்கிய படிப்பாளிகள் பலர் ஒரு பொருளாதார நெருக்கடியின் போது நாட்டை விட்டு எப்படித் தப்பிச் செல்வது என்றுதான் சிந்தித்தார்கள்.





ஏன் அதிகம் போவான்? பொருளாதார நெருக்கடியை ஒரு விதத்தில் நாட்டின் கல்வி முறையின் தோல்விதான்.முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ஒரு சிந்தனைக் குழாமை உருவாக்கியிருந்தார். ‘வியத்மக’ என்று அழைக்கப்பட்ட அச்சிந்தனைக் குழாம் நாட்டின் பெரிய படிப்பாளிகளை வைத்து உருவாக்கப்பட்டது. ஆனால் அந்த அரசாங்கம் தான் முடிவில் மக்களால் துரத்தப்பட்டது. நாட்டை பெற்றோல் கியூவில் நிறுத்திய படிப்பாளிகள் செய்த குற்றத்தை விடப் பெரிய குற்றத்தையா அந்தப் பதினாறு வயதுப் பிள்ளைகள் செய்துவிட்டார்கள்?

2003இன் ஆரம்ப நாட்களில் ஈராக்கின் சதாம் அரசு பேரழிவு இரசாயன ஆயுதங் களை வைத்திருப்பதாகவும், அது மனித இனத்துக்கே ஆபத்து என்றும் அப்பட்டமான பொய்யை கூறிய அமெரிக்கா தனது புளுகு மூட்டைகளில் இருந்து பேரழிவு ஆயதங்களை அவிழ்த்துவிட்டு ஈராக்கின் இடிபாடுகள், பிணக் குவியல்கள் மேல் 'ஜனநாயகத்தை' நிலைநாட்டியது தான் மிச்சம் எனலாம். இதனையே இன்றைய ஈராக்கில் காணலாம்.



ஈராக்கில் பேரழிவு இரசாயன ஆயுத பொய்யும் : போரும் !

# அமெரிக்க ஆக்கிரமிப்பால் பிணக் குவியலான ஃபலூஜா

### அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்த ஃபலூஜா ( Battle of Fallujah )

அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு ஈராக் மக்களின் மிகப்பாரிய போராட்டமாக வெடித்துக் கிளம்பிய முதல் நகரம்தான் ஃபலூஜா. ஈராக் தலைநகர் பாக்தாத்துக்கு மேற்கே 48 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது இந்நகரம்.

ஈராக்கை ஆக்கிரமித்த அமெரிக்கா ஏப்ரல் 28, 2003ல் ஃபலூஜாவின் ஒரு பள்ளிக்கூடத்தை இராணுவ முகாமாக மாற்ற முயன்றது. இருநூறுக்கும் மேலான மக்கள் உடனடியாகக் கூடி இந்த முயற்சியை முறியடிக்கப் போராடினர். அவர்கள் மீது அமெரிக்க ராணுவம் தாறுமாறான துப்பாக்கி சூடு நடத்தி 17 பேரைக் கொலை செய்தது.

அடுத்த இரண்டாவது நாளில் இந்த படுகொலையைக் கண்டித்துப் போராடிய மக்கள் மீது மீண்டும் அமெரிக்க சிப்பாய்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மேலும் இருவர் கொல்லப்பட்டனர்.

இச்செயல் பரந்துபட்ட ரீதியில் ஈராக்கிய மக்களின் கோபாவேசத்தை மூண்டெழச் செய்தது. ஃபலூஜா அமெரிக்க ஆக்கிரமிப்புக்கும், ஒடுக்குமுறைக்கும் எதிரான போராட்டத்தின் மையமானது.

### எண்ணை வள ஆக்கிரமிப்பு:

ஈராக்கில் கால் பதிக்காமல் எண்ணை வளப் பிராந்தியத்தில் தன் ஆதிக்கத்தையும் தனது உலக மேலாதிக்கத் திட்டத்தையும் நிறைவேற்றுவதை அமெரிக்காவால் முடியாது. நெடுந்தொலைவில் இருந்து குண்டு வீசினாலும் ஈராக்கின் எண்ணை வயல்களை இலகுவாக உறிஞ்சு கைப்பற்ற முடியாது.

> **“(இருபது வருடங்களுக்கு முன்னர் ஈராக்கை ஆக்கிரமித்த அமெரிக்கா ஏப்ரல் 28, 2003ல் ஃபலூஜாவின் ஒரு பள்ளிக்கூடத்தை இராணுவ முகாமாக மாற்ற முயன்றதில் இருந்து தொடங்கிய கோரமான போரே** Battle of Fallujah **ஆகும். ஈராக்கில் பிணக் குவியல் மேல் நாட்டப்பட்ட ஜனநாயகம். ஈராக்கில் இன்னோரு 'மைலாய்' படுகொலையே - ஃபலூஜா ஆகும்)”**

இதனாலேயே பீதியுடன் கால் பதித்த அமெரிக்க பொம்மை அரசாலும், பிரித்தாளும் சூழ்ச்சியாலும் மட்டுமல்லாமல் தான் அடைந்த அதே பீதியை மக்களுக்கு ஏற்படுத்தும் பயங்கரவாத நடவடிக்கைகளாலுமே ஊன்றிய காலை உறுதி செய்துகொள்ள முயற்சித்தது.

ஃபலூஜாவில் கொடூரமான போர்க் குற்றங்கள் பல செய்திருந்த 'ப்ளாக்வாட்டர் யூ.எஸ்.ஏ' (BlackWater USA) என்ற தனியார் கூலிப்படையின் அணி வரிசையை மார்ச் 31, 2004 அன்று வெகுண்டெழுந்த மக்கள் கூட்டம் ஒன்று தடுத்து நிறுத்தி அவர்களுக்கு தண்டனை வழங்கியது

பாரிய அமெரிக்க இராணுவ மேலாதிக்கத்துக்கு எதிராக ஃபலூஜா மக்கள் நடத்திய போராட்டங்களும், அடைந்த வெற்றிகளும் நாடெங்கிலும் மக்களால் கொண்டாடப்பட்டது, உலகத்தார் கவனத்தை எல்லாம் ஃபலூஜா தம் பக்கம் ஈர்த்துக் குவித்தது. அதனால் அமெரிக்க ஆக்கிரமிப்பு கேள்விக் குறியாக்கப்பட்டது.

### பெண்டகன் சுற்றி வளைத்த ஃபலூஜா:

பழிவாங்கும் முகமாக அமெரிக்க இராணுவத் தலைமையகம் பெண்டகன் நவம்பர், 2004ல் ஃபலூஜா நகரினை சுற்றி வளைத் தது. உள்ளிருப்போர் அனைவரும் எதிரிகள் என்று அறிவிக்கப்பட்டனர். நகரம் படுபயங் கரமான ஆயுதங்கள் தரித்த ஈவிரக்கமற்ற ஏரா ளமான இராணுவத்தினரின் போர்க்களம் ஆக்கப்பட்டது. தப்பி ஓட முயன்ற மக்கள் குடம்பத்துடன் மீண்டும் அந்த கொலைக் களத்தில் பிடித்துத் தள்ளப்பட்டனர்.

பேரழிவு இரசாயன ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் இறங்கிய அமெரிக்காதான் வெள்ளைப் பாஸ்பரஸ் என்ற இரசாயனப் பொருளை மிகப் பெரும் அளவில் இந்தத் தாக்குதலில் பயன்படுத்தியது.

போர்க்களத்தை ஒளியூட்டவே வழக்கமாய் பயன்படுத்தப்படும் இந்த இரசாயனம் மரணத்தை விளைவிக்கும் பயங்கரமான இரணங்களை ஏற்படுத்தக் கூடியது.

கதவுகள், சன்னல்கள் போன்ற கட்டுமானப் பொருட்கள், அதற்குப் பின்னால் ஒளிந்திருக்கும் மக்களின் உடைகள் என தன் வழிப்பட்ட தடைகள் அனைத்தையும் எரித்துக்கொண்டு முன்னேறி இறுதியில் மனிதத் தோலையும், உள்ளிருக்கும் எலும்பையும் தின்று செறிக்கும் அகோரப்பசி கொண்டது அந்த இரசாயனம்.

### அமெரிக்காவின் வெள்ளைப் பாஸ்பரஸ் தாக்குதல் :

வெள்ளைப் பாஸ்பரஸ் தாக்குதலில் மக்கள் பதுங்கி இருக்கும் பாதுகாப்பான குடியிருப்புக் கட்டிடங்களின் உள்ளிருக்கும் பிராண வாயுவையும் உறிஞ்சி எடுத்துவிடும். பயங்கர தீமைத தன்மை கொண்ட வெள்ளைப் பாஸ்பரஸ் இத் தாக்குதலில் ஏராளமாகப் பயன்படுத்தப்பட்டது. இத்தோடு நில்லாமல் சொல்லொணாத் துயரைத் தலைமுறை தலைமுறைக்கும் விளைவிக்கும் கதிர்வீச்சுத் தன்மைகொண்ட ஏராளமான குண்டுகள் இந்த நகரத்தின் மீதான குவிந்த தாக்குதலில் பயன்படுத்தப்பட்டன என்றும் அஞ்சப்பட்டது.

அமெரிக்க இராணுவத்தால் உயிருடன் பிடித்துச் செல்லப்பட்ட மக்கள் 1300-1500 மக்கள் அனைவரும் படுகொலை செய்யப்பட்டனர். இதையே வேறு சொற்களில், “ஆயுதப் போராளிகள்” 1400 பேர் கொல்லப்பட்டனர் என்ற தனது மேற்குலக ஊடகங்களின் அறிவிப்பின் மூலம் வெளிப்படுத்தியது அமெரிக்கா.

போர் வெறி கொண்ட இராணுவம் ஃபலூஜா மக்களைப் பழிவாங்கும் தனது நோக்கத்தை இந்த செயலின் மூலம் வெளிப்படுத்திக் கொண்டது. படுகாயமுற்றுப் பரிதாப நிலையில் இருந்த ஒரு ஈராக்கியரை அமெரிக்க சிப்பாய் ஒருவன் சுட்டுக் கொல்வதைப் டீஊ செய்தி படம் பிடித்திருந்தது.

தனது பாதுகாப்பு கருதி செய்யப்பட்டதே இந்த செயல் என அமெரிக்க இராணுவ விசாரணை பின்னாளில் அப்பட்டமான பொய்யை கூறியது.

### ஃபலூஜா மக்களைப் பழிவாங்கிய படலம் :

பத்து நாட்கள் நடந்த இந்த தாக்குதலில் இந்நகரத்து மக்கள் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்பது இன்று வரை யாருக்கும் தெரியாது. இத் தாக்குதலுக்கு முன்னதாக பல பத்தாயிரம் மக்கள், பெரும்பாலும் பெண்களும், குழந்தைகளும் நகரத்தை விட்டு வெளியேறினர். இந்த தாக்குதலுக்கு முந்திய ஃபலூஜாவின் மக்கள் தொகை 4-6 லட்சம். தற்போதைய சனத்தொகையோ வெறும் 2-3 லட்சம் மட்டுமே இருக்கும் என அஞ்சப்படுகிறது.

இத் தாக்குதலில் நகரத்தின் கட்டிடங்கள் பாதிக்கு மேல் இடித்துத் தள்ளப்பட்டிருக்கின்றன. ஈராக்கின் பல பகுதிகளைப் போலவே ஃபலூஜாவும் இடிபாடுகளுக்கு இடையேதான் இன்னமும் வாழ்ந்துகொண்டிருக்கிறது. தாக்குதல் முடிந்து பலஆண்டுகள் கடந்த பின்னும் இது தான் நிலை.

### ஃபலூஜாவில் தொடரும் நோய்:

ஃபலூஜாவின் புற்றுநோய் விகிதம் ஹிரோஷிமாவைக் காட்டிலும் படுமோசமாக உள்ளது.

"ஈராக்கிய நகரம் ஃபலூஜாவின் புற்றுநோய், சிசு மரணம் மற்றும் மகப்பேறில் பாலின விகிதாச்சாரம் 2005-2009" என்ற தலைப்பிலான சமீபத்திய ஆய்வு, "ஃபலூஜா நகர மக்கள் புற்று நோய், லூக்கிமியா- இரத்தப் புற்று நோய், சிசு மரணம், பாலின மாறாட்டம் ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த பாதிப்புகளின் அளவு 1945-ம் ஆண்டு ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் அமெரிக்க அணுகுண்டுத் தாக்குதலில் தப்பிப் பிழைத்தோரிடம் காணப்படும் அளவை விடக் கூடுதலாக இருக்கிறது என்ற உண்மையை வெளிக்கொண்டு வந்திருக்கிறது.

அமெரிக்கத் தாக்குதலுக்கு முன்பு இருந்த அளவைக் காட்டிலும் புற்றுநோய் நான்கு மடங்கு அதிகரித்து இருப்பதையும், தற்போது அங்கு காணப்படும் புற்றுநோயின் தன்மை அணுக் கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டு தப்பிப் பிழைத்த ஹிரோஷிமா, நாகசாகி மக்களிடம் காணப்பட்ட புற்றுநோயின் தன்மையுடன் ஒத்திருப்பதையும் அந்த ஆய்வுகள் வெளிப்படுத்துவதாக ஆய்வாளர்கள் கண்டறிந்து தெரிவிக்கின்றனர்.

### ஹிரோஷிமாவைக் காட்டிலும் படுமோசமான பாதிப்பு:

ஈராக்கின் அண்டை நாடுகளான எகிப்து, ஜோர்டான், குவெய்த் ஆகியவற்றில் காணப்படுவதைப்போல இரத்தப் புற்றுநோய் [leukemia] பாதிப்பு 38 மடங்கும், சிசு மரணம் 12 மடங்கும், மார்பகப் புற்றுநோய் 10 மடங்கும் ஃபலூஜாவில் அதிகரித்து இருக்கிறது. பெரியவர்களிடையே பெரும் அளவில் மூளைப் புற்று நோய்க் கட்டிகளும் [brain tumors], சீழ்க் கொப்பளங்களும் [Lymphoma] காணப்படுவ தாக ஆய்வு அறிக்கை குறிப்பிடுகிறது.

1050 ஆண் குழந்தைகளுக்கு 1000 பெண் குழந்தைகள் என்று இருந்த விகிதம் 2005-க்குப் பின் மிகப் பெரிய மாற்றத்தைக் கண்டிருக்கிறது. அமெரிக்கத் தாக்குதலுக்குப் பிந்திய இந்த நான்கு ஆண்டுகளில் பிறந்த குழந்தைகளில் பிறப்பு விகிதம் 860 ஆண்களுக்கு 1000 பெண்கள் என்று தலைகீழாகி இருக்கிறது. இந்த பாலின விகித மாறுபாடும் 1945-ன் அமெரிக்க அணுகுண்டுத் தாக்குதலுக்குப் பிந்திய ஹிரோஷிமாவை ஒத்திருக்கிறது.

அணுவுலை எரிபொருட் கழிவு என அறியப்படும் இந்த திறன் குறைந்த யுரேனியத்தை அமெரிக்க இராணுவம் கவசங்கள், பதுங்கு குழிகளைப் பிளக்கும் குண்டுகளிலும், தோட்டாக்களிலும் பயன்படுத்துகிறது. இதன் வெடிப்பின்போது 40 சதவீதத்துக்கும் மேலான யுரேனியம் மீசிறு அணுத்துகள்களாக வெளிப்படுகிறது. இது தாக்கப்பட்ட பகுதிவாழ் மக்களின் இரத்த ஓட்டத்தில் எளிதில் புகுந்து நிணநீர் சுரப்பிகளில் தங்கிவிடுகிறது. அது வயதுவந்தோரின் விந்தணுவிலும், கருமுட்டையிலும் உருவாகும் மரபணுக் குறியீடுகளை (DNA) தாக்கி அடுத்த தலைமுறையினருக்கு பாரிய பிறவிக் கோளாறுகளை உண்டுபண்ணுகிறது.

இத்தகைய பாதிப்பால் விகாரமான பிறப்புகள், சிசு மரணம், பிறவிக் கோளாறுகள் மற்றும் புற்றுநோய்களின் எண்ணிக்கை ஃபலூஜாவில் செங்குத்தாய் உயர்ந்து நிற்பதை உறுதிப்படுத்தும் முறைப்படியான விஞ்ஞானபூர்வமான முதல் ஆய்வு இது.

சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம் பற்றிய சர்வதேச ஆய்வு ஏடு (IJERPH) வெளியிட்ட கொள்ளைநோய் பற்றிய ஆய்வும் அண்டை நாடுகளைக் காட்டிலும் படுமோசமான அளவில் மேற்சொன்ன பாதிப்புகள் ஃபலூஜாவில் நிலவுவதைக் கண்டறிந்து கூறியது.

பல ஈராக்கிய மற்றும் பிரிட்டிஷ் மருத்துவர்கள் இணைந்து கதிர்வீச்சு தொடர்பான நோய்களின் வெகுவான பரவல் பற்றிய ஒரு விசாரணை நடத்தக் கோரி ஐ.நா. சபைக்கு அக்டோபர், 2009ல் கீழ்க்கண்ட விவரங்களுடன் ஒரு அறிக்கை எழுதினர். தலை இன்றி முண்டமாகவும், இரு தலைகளுடனும், நெற்றியில் கண்ணுடனும், கைகால்கள் அற்ற முடமாகவும், இன்னபிறவாகவும் விகாரமாகப் பிறக்கும் ஏராளமான குழந்தைகளைக் காணச் சகியாது ஃபலூஜாவின் பெண்கள் பிள்ளைப் பேற்றை நினைத்து அரண்டு போயிருக்கிறார்கள். மேலும், சின்னஞ்சிறு குழந்தைகளும் கொடூரமான புற்று நோய்க்கும், இரத்தப் புற்று நோய்க்கும் ஆளாகி இருக்கிறார்கள் என செப்டம்பர், 2009-ல் ஃபலூஜா பொது மருத்துவமனையில் 170 குழந்தைகள் பிறந்தன. அவற்றில் 24மூ குழந்தைகள் பிறந்த ஏழு நாட்களுக்குள் இறந்துவிட்டன. அவ்வாறு இறந்த குழந்தைகளில் 75மூ குழந்தைகள் மேற்சொன்ன விகாரத்துடன் பிறந்தவை என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

ஃபலூஜாவில் என்றும் காணாத அளவுக்குப் பிறவிக் கோளாறுகளுடன் பிரசவம் ஆவது மட்டுமல்ல, 2003-ம் ஆண்டுக்குப் பின்னால் குறைப் பிரசவங்கள் தாருமாறாக அதிகரித்து இருக்கின்றன. அதனினும் கொடுமை என்னவென்றால், உயிர்த்திருக்கும் குழந்தைகளில் கணிசமானவை படிப்படியான பாரதூரமான உடலுறுப்புக் குறைபாடுகளுக்கு ஆளாகிறன.

### பாரிய போர்க் குற்றங்கள்:

ஃபலூஜாவின் மீது நடத்தப்பட்ட தாக்குதல், நமது காலத்திய படுமோசமான போர்க் குற்றங்களில் ஒன்றாகும். இவ்வித நடவடிக்கை “அதிர்ச்சியூட்டும் எச்சரிகை” அல்லது “கூட்டுத் தண்டனை” என அழைகப்படுகிறது. இது சட்டப்படி ஒரு போர்க் குற்றமாகும். ஆயினும் உலகம் இன்னமும் மௌனித்தே உள்ளது.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

# கட்டுக்கடங்கா தைரியமும்! உரிமைக் குரலும்!!

# மாமனிதர் ரவிராஜ்



மக்களுக்கு உண்மையான தொண்டனாக இருப்பவனை அம்மக்கள் தமது தலைவனாக ஏற்றுக் கொள்கின்றனர் என்ற மெய்மைக்கு எடுத்துக்காட்டாக அமைந்தவர் மாமனிதர் ரவிராஜ்.

அவர் தலைவனாக பிறக்கவில்லை. தலைவனாகக் கூடிய அரசியல் வாரிசாகவும் பிறக்கவில்லை நல்லாசிரியர்களான பெற்றோருக்குப் பிளளையாகப் பிறந்த ஒருவர். அதனால், மக்களின் மீதான அளவற்ற அன்பு அம்மக்களின் துன்பங்களை போக்குவதற்கான அயராத பணியுமே அவரை அம்மக்களின் தலைவனாக உயர்த்தின. மற்றவர் துயர் கண்டும் சிலர் பாராமுகமாக இருப்பர்.

இன்னும் சிலர் அழைத்தால் மட்டும் வந்து உதவுவர். ஆனால் ரவிராஜ் அவர்களோ துயர் கண்டவுடன் மட்டுமல்லாது தூரவிருந்து கேள்விப்பட்டாலே கூட தனது சிரமங்களை பொருட்படுத்தாது ஓடோடி வந்து உதவுவதை வழமையாக கொண்டிருந்தார்.

அதேபோல சிலர் எவருக்கும் உதவார் சிலர் தமக்கு வேண்டியோருக்கு மட்டும் உதவுவர். ஆனால், ரவிராஜ் அவர்களோ ஏழையா, பணக்காரனா தனது கட்சியைச் சேர்ந்தவனா? அல்லது மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவனா? அறிந்தவனா? அல்லது அறியாதவனா என்ற எவ்வித வேறுபாடுகளும் இன்றி உதவும் ஒரு பெருந்தகை.

**கந்தையா அருந்தவபாலன்**

அவர் எல்லோர் மீதும் அன்பு செலுத்தியதால் அவருக்கு எதிரிகள் என்று யாரும் இருக்கவில்லை. ஆனால், அரசியல் எதிரிகள் இருந்தார்கள் அதுவும் தமிழ்த் தேசியப் பரப்பில் அவருக்கு எதிரான கொள்கைகளைக் கொண்டவர்கள் இருந்தாலும் யாரும் அவரை எதிரியாக பார்த்தது கிடையாது. அதேபோல சாதாரண சிங்கள மக்களும் நீதியான சில தலைவர்களும் கூட ரவிராஜ் அவர்களை தங்களில் ஒருவராகவே பார்த்தார்கள்.

ஆனால், தமிழினத்தை கருவறுக்க கனவிலும் கூட துடித்த பௌத்த சிங்களப் பேரினவாதிகள் மட்டுமே அவரை எதிரியாகப் பார்த்தார்கள். தமிழினத்திற்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியில் தாம் கட்டிய மாய பிம்பங்களை ரவிராஜ் உடைத்து தமது இருப்புக்கு வேட்டுவைத்து விடுவாரோ என்ற பேரினவாதிகளின் பயமே அவரது உயிருக்கு வேட்டு வைத்தது என்பது யாமறிந்த கசப்பான உண்மை.

இக்கட்டான ஒரு அரசியல் சூழ்நிலையில் பல்வேறு எதிர்மறையான விமர்சனங்களின் மத்தியிலே ரவிராஜின் அரசியல் பிரவேசம் நிகழ்ந்தது.

எனினும் மிகக் குறுகிய காலத்துக்குள்ளையே எல்லோராலும் நேசிக்கப்படும் ஒரு தலைவராக அவர் மாறியதற்கு காரணம் மக்கள் சார்ந்த அவரது எண்ணங்களும் செயற்பாடுகளுமே.

அவரது சட்ட அறிவுக்கு அப்பால் அவர் பெற்றிருந்த அரசியல் ஞானமும், மும் மொழியாற்றிலும் எப்போதும் தனது மக்களுக் கானதாகவே இருந்தனவன்றி மக்கள் மீது அதிகாரம் செலுத்துவதற்கோ அல்லது சுயலாபங்களை அடைவதற்கோ ஒருபோதும் அவரால் பயன்படுத்தப்பட்டதில்லை.

பாராளுமன்றப் பதவிகளின் மூலம் சொத்து சுகம் சேர்ந்த சகபாடிகளின் மத்தியில் இவர் தனது சொத்துக்களை மட்டும் இன்றி கடன் பட்டும் மக்களுக்கு பணி செய்வதையே சுகமாகக் கருதினார்.

தென்மராட்சி அவரது பிறந்த மண் ஆயினும் தாயகத்தில் உள்ள அனைத்து மக்களாலும் நேசிக்கப்பட்டார். அவரும் அவ்வாறே நேசித்தார். தனது அபிவிருத்தி பணிகளை பிரதேச வேறுபாடுகள் இன்றி பரந்த அளவில் மேற்கொண்டார். குடாநாட்டில் உள்ள எந்த ஒரு கிராமத்துக்குச் சென்றாலும் இன்றும் கூட அவரால் மேற்கொள்ளப்பட்ட பணியொன்றேனும் அவர் பெயரைச் சொல்லி நிற்கும். மற்றைய பாராளுமன்ற உறுப்பினர்கள் போல தமக்கு ஒதுக்கப்பட்ட நிதியை கிள்ளித்தெளித்து அரசியல் செய்தவர் அல்ல. அதற்கு மேலாக பல் வேறு வழிகளிலும் வளங்களை பெற்று பல வளர்ச்சிப் பணிகளை செய்தவர்.

தேவைகளுக்காக தனது இனத்தின் உரிமைகளை ஆட்சியாளர்களுடன் விலை பேசியவரல்லர் எந்த ஒரு பொழுதிலும் அவற்றுக்கான கோரிக்கைகளை விட்டுக் கொடுத்தவரும் அல்ல.

ஆனால், பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தனது மக்களின் தேவைகளுக்காக அமைச்சுக்களின் படிகளில் ஏற அவர் ஒரு போதும் தயங்கியதில்லை.

மக்களின் தேவைகளுக்காக அமைச்சர்களுடன் கதைக்க தயங்கும் அதே நேரம் சொந்த தேவைகளுக்காக பல்லிளிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களை நான் அறிவேன். ஆனால், ரவிராஜ் மக்களுக்காக மட்டுமே உரிமையுடன் கேட்டதால் அவரது நேர்மையை மதித்துப் பல உதவிகளை அவர்கள் வழங்கினார்கள் என்பதையும் நான் அறிவேன். இது போன்ற பல காரியங்களை தொலைபேசி ஊடாகவே சாதிக்கும் வகையிலான வல்லமையும், உறவும் அவரிடம் காணப்பட்டது.

தேர்தல் நோக்கில் அல்லது தேர்தல் நெருங்கும் போது மக்களை சந்திப்பவர்கள் அல்ல ரவிராஜ் திட்டமிட்ட ரீதியில் மாதாந்தம் மக்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு அரசியல்கள நிலைமைகளை அவர்களுக்கு

> **“சத்திய இலட்சியத்துக்காக வாழ்ந்த, உயர்ந்த மனிதர்களை சாவு என்றும் அழித்து விடுவதில்லை! சரித்திர நாயகர்களாக எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்கள் என்றும் வாழ்வார்கள். தமிழர் வாழ்விலும் வரலாற்றிலும் ரவிராஜ் என்றும் நிலைத்திருப்பார் என்பதையே உணர்த்தி நிற்கின்றன.”**

தெரிவித்ததுடன் மக்களின் குறைகளைக் கேட்டறிந்து தீர்த்து வைக்கும் ஒரு "குறைதீர்க்கும்" சேவை நிலையமாகவும் அதனை அமைத்துக் கொண்டிருந்தார்.

இதில் சிறப்பாக குறிப்பிடக்கூடிய இன்னொரு



அம்சம் தொகுதி பணிமனையில் மட்டுமின்றி பிரதேச ரீதியாகவும் சென்று இக் கலந்துரையாடல்களை மேற்கொண்டதன் மூலம் மக்களின் சிரமங்களை குறைத்ததுடன் பிரச்சனைகளை நேரில் ஆராய்வதற்கும் வழியேற்படுத்தியதாகும்.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமெனில் சிங்கள மக்களின் ஆதரவு அவசியம் என்பதை அவர் உறுதியாக நம்பியதால் தெற்கில் உள்ள முற்போக்கு சக்திகளுடன் இறுக்கமான பிணைப்பினை ஏற்படுத்தியிருந்தார்.

இந்த முற்போக்கு சக்திகளுடன் இணைந்து சிங்கள மக்களுக்கு எமது பிரச்சினைகளை புரிய வைப்பதற்கு கிடைத்த அத்தனை வாய்ப்புகளையும் மிகச் சிறப்பாகவே அவர் பயன்படுத்திக் கொண்டார்.

அவர் தமிழ் மக்களின் உரிமைக்காக மட்டுமின்றி சிங்கள மக்களின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் ஓங்கி குரல் கொடுத்த ஒரு மனித உரிமைப் போராளி என்பது சிங்கள தலைவர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும்.

தலைநகரில் நடந்த மனித உரிமைக்கான எல்லாப் போராட்டங்களிலும் ரவிராஜே முன்னிலை வகித்து இருந்தார். அவ்வகையில் இன மதம் கடந்து மக்களை நேசித்த உயர்ந்த மானிடன்.

அவர் வாழும் போதும் தன் மக்களுக்காக வாழ்ந்தார். அம் மக்களுக்காகவே தனது உயிரை ஈந்தார். தன் சாவின் ஊடாகவும் இலங்கையில் தமிழ் மக்களுக்கான நீதி மறுக்கப்படுவதை உலகத்திற்கு எடுத்துக் கூறியுள்ளார்.

ஆம் கொன்றவர்களை சான்றுகளுடன் நிரூபித்த போதும் அவர்களுக்கு தண்டனை இல்லை. ரவிராஜின் படுகொலைக்கு நீதி இல்லை, அவரது குடும்பத்தினருக்கு நியாயம் தரப்படவில்லை.

இதுதான் இலங்கை நீதித்துறை. இதனால் இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டுமென்ற தமிழ் மக்களின் கோரிக்கைக்கு ஆத்மார்த்த பலத்தை சொர்க்கத்தில் இருந்து ரவிராஜ் அவர்கள் வழங்கிக் கொண்டே இருப்பார் என்பது தமிழ் மக்களின் உறுதியான நம்பிக்கை.

# வே.பிரபாகரனின் பிரேத பரிசோதனை அறிக்கைக்கும் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கும் என்ன சம்பந்தம்? எம்.கே.சிவாஜிலிங்கம் கேள்வி



இறுதி யுத்தத்தின் போது விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு என்ன நடந்தது என்ற விடயத்தை அரசாங்கம் நாட்டின் தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் மூடி மறைத்து பொய்களை சொல்லி வருகின்றது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

வே.பிரபாகரனின் பிரேத பரிசோதனை அறிக்கை வெளியிடுவதற்கும் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கும் என்ன சம்பந்தம் உள்ளது என்று அவர் மேலும் கேள்வி எழுப்பி உள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஊடகவியலாளர் ஒருவரினால் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்க நாட்டின் பாதுகாப்பு அமைச்சு இராணுவ தலைமையகம் மறுப்பு தெரிவித்தது.

இந்நிலையில் வே.பிரபாகரன் மரபணுப் பரிசோதனைக்காக அவரின் குடும்ப உறுப்பினர்களிடம் இருந்து மாதிரிகள் பெறப்பட்டதா என மருத்துவ சிகிச்சைக்காக தமிழ்நாடு சென்று சென்னையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வரும் எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்களிடம் யாழ்ப்பாண பத்திரிகை ஒன்றின் ஊடகவியலாளர் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் உயிரிழந்ததாக கூறப்பட்ட பின்னர் உயிரிழந்தது அவர்தான் என்பதை உறுதிப்படுத்துவதற்காக அவரின் உடலை தாங்கள் மரபணு பரிசோதனை செய்து உறுதிப்படுத்தினோம் என்று யுத்தம் முடிந்த ஒரிரு நாட்களில் அரசாங்கம் அறிவித்திருந்தது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில் மரபணுப் பரிசோதனை செய்து கொள்வதற்கான வசதிகள் இருந்திருக்கவில்லை. ஆகவே யுத்தம் முடிந்த ஒரிரு நாட்களில் மரபணுப் பரிசோதனை செய்ததாக பொய்யான தகவலை அரசாங்கம் வெளியிட்டிருந்தது.

ஒருவேளை அவரின் உடல் என்று சொல்லப்பட்டதில் இருந்த ஒரு பகுதியை எடுத்துவைத்துப் பின்னர் வே.பிரபாகரனின் தந்தை, தாயார் அல்லது சகோதர, சகோதரிகளிடம் எந்த கால கட்டத்திலும் மரபணு மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்படவில்லை.

மிகுதி 11ம் பக்கம் பார்க்க...

# மானுட வரலாற்றின் துயரமான அத்தியாயங்கள்: இனப்படுகொலையும் சர்வதேச சட்டங்களும்!

'இனப்படுகொலை' **(Genocide)** என்பது முறைப்படுத்தப்பட்ட மற்றும் விரிவான முறையில் இனவரையறை, நிற பேதமை, மதம் மற்றும் தேசியம் என்ற ஏதாவதொரு வகையில் ஒரு இனத்தை பாகுபடுத்தி, அந்த இனத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிப்பது ஆகும்.

இனப்படுகொலைக்கு எதிராக ஐக்கிய நாட்டு அமைப்பின் புதிய சட்டம் 1951 ஆம் ஆண்டு அமலுக்கு வந்தபின், அதன் அப்போதைய 80 உறுப்பு நாடுகளும் அந்த சட்டத்தின் சரத்துக்களை தங்கள் நாட்டு சொந்த சட்டத்தில் இணைத்தன. இந்த செயலானது, குற்றவாளிகளை பரந்த அளவில் அடையாளம் காண்பதற்கு உதவி புரிந்தது எனலாம்.

உலகம் முழுவதும் பல நாடுகளிலும் கடந்த 250 ஆண்டுகளில் இனப்படுகொலைகள் என்ற பெயரில் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் என ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை லட்சமோ, கோடியோ அல்ல பல மில்லியன்களைத் தாண்டுகிறது என்பதுதான் உண்மை.

ஓர் இனத்தை அது இருந்த சுவடே தெரியாமல் அழிப்பதாகவும், ஓர் இனத்தின் அல்லது அந்தக் குழுவின் உறுப்பினர்களைக் கொல்வது, குழு உறுப்பினர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியாக மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதே இனப் படுகொலையாகக் கருதப்படுகிறது. ஓர் இனத்தைச் சேர்ந்த மக்களை கொத்துக் கொத்தாகக் கொன்று குவிப்பதுடன், அடுத்த தலைமுறை உருவாக விடாமல் தடுப்பதும் இனப்படுகொலையாகப் பார்க்கப்படுகிறது.

இனப்படுகொலையானது ஆங்கிலத்தில் **(Genocide)** ஜெனோசைட் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஜெனோசைட் என்ற வார்த்தையை ரஃபேல் லெம்கின் என்ற போலந்து நாட்டைச் சேர்ந்த யூத வழக்கறிஞர், நாஸி தாக்குதலிலிருந்து தப்பி, அமெரிக்காவில் தஞ்சமடைந்தபோது லத்தீன் - கிரேக்க - பிரெஞ்ச் மூலங்களிலிருந்து உருவாக்கினார் என அறியப்படுகிறது.

1933 ஆம் ஆண்டு ஈராக்கில் நடந்த அசீரிய (Assyrian) இனப் படுகொலையானது, ரஃபேல் லெம்கின் நினைவை முதலாம் உலகப் போரின்போது நடந்த ஆர்மீனியப் படுகொலையை நோக்கி நினைவு படுத்துச் சென்றது. எனவே இனப்படுகொலை என்ற காட்டுமிராண்டி செயலுக்கெதிரான சர்வதேச சட்ட வடிவுக்கான ஒரு முன்வரைவை அவர் ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டில் இருந்த சர்வதேச நாடுகள் கூட்டமைப்பின் (லீன் ஆஃப் நேஷன்ஸ்) சட்ட கவுன்சிலுக்கு அப்போது வழங்கினார்.

உலகில் இனப்படுகொலை என்பதற்கு அனைவரும் ஏற்றுக்கொள்ளும் படியான ஒரு விளக்கத்தை இன்று வரை பெறமுடியாததற்கு இந்த அரசியல் பிரச்சனைகளே காரணம் என்றும், விமர்சிக்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு நாடும் தனது அரசியல் நலனுக்கேற்ப இந்த விஷயத்தில் நடந்து கொள்கின்றன.

ஒரு இனப்படுகொலை நடந்த முடிந்தபிறகு குற்றவாளிகளை தண்டிப்பதற்கு சர்வதேச அளவில் சில நாடுகள் நடவடிக்கை எடுக்கின்றன. ஆனால் அந்தப் படுகொலை நடவடிக்கையில் அந்த நாடுகள் ஏன் எதுவுமே செய்வதில்லை என்ற பாரதூரமான விமர்சனம் எப்போதும் உண்டு.

**சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள்:**




இனப்படுகொலை ஒரு சர்வதேச சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படும் ஒரு குற்றமாகும். இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த பிறகு, இனப்படுகொலை என்பது கட்டாயத் தேவையின்படி, ஒரு மாபெரும் சர்வதேச குற்றமாக கருதப்பட்டாலும், அதை விசாரிக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள் இருந்தாலும், சம்பந்தப்பட்ட நாடுகளோ அல்லது வலிமை வாய்ந்த நாடுகளோ ஒத்துழைக்காமல் சட்டத்தாலும், நீதிமன்றத்தாலும் எதுவும் செய்துவிட முடியாது என்பது மட்டும் உண்மை.

ஈரானில் 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய பஹாய் **(Bahai)** என்ற சமயத்தின் நம்பிக்கையாளர்கள் சுமார் 25 ஆயிரம் பேரை அந்நாட்டு ஷியா இஸ்லாமிய அரசாங்கம் கொன்று குவித்தது. அவர்களின் சொத்துக்களையும், உரிமைகளையும் பறித்தது. பலரை நாட்டை விட்டு விரட்டியது. இன்று வரை அந்நாட்டில் பஹாய்களுக்கு கொடுமைகள் நடந்தவண்ணம் உள்ளன.

தொடரும் துயரமாக முதலாம் உலகப்போர் சமயத்தில் ஆர்மீனியா நிலத்தில் துருக்கியர்களால் லட்சக்கணக்கில் ஆர்மீனியர்கள் கொல்லப்பட்டனர். ஈராக் மற்றும் துருக்கி பிராந்தியத்தின் ஆயிரக்கணக்கான குர்துக்கள் கொல்லப்பட்டனர்.

பின்னர் இரண்டாம் உலகப் போரின் போது, பல லட்சம் யூதர்களை ஹிட்லரின் நாஸிச அரசு படுகொலை செய்தது.

**உலகப் போர்களில் இனப்படுகொலை:**
முதல் உலகப்போரில் ஜெர்மனியோடு சேர்ந்த துருக்கி தோல்வியடைந்தது. தோல்விக்கு பழிவாங்கும் முகமாக ஆர்மீனியர்கள் மீது மிகவும் கோபமடைந்தது ஓட்டோமன் அரசு.


துருக்கு பேரரசைச் சேர்ந்த ராணுவத்தின் மூலம் ஆர்மேனியர்கள் துரோகிகள் என அவர்கள் குற்றம்சாட்டப்பட்டு, கைது செய்து பலர் கொல்லப்பட்டனர். 1915இல் துருக்கி ஓட்டோமன் பேரரசு, முதல் உலகப்போர் தொடங்கும் சமயத்தில் தங்களது இருப்பினைத் தக்கவைத்துக்கொள்ள அந்தப் போரில் ஈடுபட முடிவு செய்தது.

ஏற்கெனவே இழந்த செல்வாக்கினை மீட்க இது உதவும் என்று நம்பி அவர்கள் அதில் இறங்கினர். முதல் உலகப்போரில் ஜெர்மனியோடு இணைந்து களம் கண்டது ஓட்டோமன் அரசு.

துருக்கியின் உள்நாட்டில் அதிகாரச் சண்டை அந்நாட்டிற்கு மற்றொரு தலைவலியாக அமைந்தது. இந்த நிலையில் நிறைய புரட்சி இயக்கங்கள், நாடு முழுவதும் பலவாறாகத் தோன்றின. இதற்கெல்லாம் காரணம் யார் என்று ஆராய்ந்த போது, ஆர்மீனியர்கள்தான் என்று குற்றஞ்சாட்டி அவர்களை படுகொலை செய்தது.

இவ்வாறாக 1915 முதல் 1918-ம் ஆண்டு வரை ஓட்டோமன் அரசால் 5 முதல் 12 லட்சம் ஆர்மீனியர்கள் கொல்லப்பட்டனர்.

**ஹிட்லரின் யூத படுகொலை :**



யூதர்களை கொடுமைப்படுத்துவது, துன்புறுத்துவது, கொலைசெய்வது என இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்த சூழலில், தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. உண்மையில் ஹிட்லரால் ஜெர்மனியில் யூதர்கள் கொடூரமாக திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

யூதர்கள் நெருக்கடியான பகுதிகளில் அடைத்துவைக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து சரக்குத் தொடர் வண்டிகள் மூலம் நூற்றுக் கணக்கான மைல்கள் தொலைவில் இருந்த வதை முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பலர் வழியிலேயே இறந்து போயினர். எஞ்சியோர் நச்சுவாயு அறைகளுள் அடைத்துக் கொல்லப்பட்டனர்.

இரண்டு வகையான முகாம்களை நாஜிக்கள் அமைத்தனர். ஒன்று, சாதாரண கைதி முகாம். இதில் கைதிகளை அடிமை போல் நடத்தி, அவர்களை கசக்கிப் பிழிந்து வேலை வாங்குவார்கள். தேவையில்லாமல் கொல்லமாட்டார்கள். இன்னொன்று வதை முகாம்கள், இவை யூதர்களை கொல்வதற்காகவே உருவாக்கப்பட்டதாகும்.

**கம்போடியாவில் பொல் பொட் அரசின் கோரம் :**



கம்போடியாவில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற வேண்டும் என்று எண்ணினார் ஆட்சியேறிய பொல் பொட் **(Pol Pot)** அரசு. அனைவரும் விவசாயம் செய்ய வேண்டும் எனக் கட்டாயப் படுத்தப்பட்டனர். குறிப்பாக 1975-1979 காலகட்டத்தில் ,

பொது மக்களின் சொத்துக்கள் அனைத்தும் பொதுவுடைமை ஆக்கப்பட்டு, பொல் பொட் அரசால் கைப்பற்றப்பட்டது.

1953-ம் ஆண்டு கம்போடியா பிரான்ஸிடமிருந்து விடுதலை அடைந்த பின், சிஹானக் கம்போடியா அரசனாகப் பொறுப்பேற்றார். கம்போடியன் கம்யூனிஸ்ட் கட்சியின் (கிமேர் ரூஜ் ) தலைவர் ஆன பொல் பொட் சிஹானக்கை பதவியிறக்கி, பின்னர் 1976-ல் பொல் பொட் பிரதமராகப் பதவியேற்றார். வணிகம், மருத்துவம், தொழில்துறை எனப் பல துறைகள் எல்லாம் நிறுத்தப்பட்டன.

ஆட்சியாளர்களை எதிர்த்து போராடிய மக்களைச் சிறையிலடைத்து சித்ரவதை செய்தும் பசி, பட்டினி மற்றும் சட்டவிரோதமான முறையிலும் படுகொலைகள் அரங்கேற்றப்பட்டன.

குருட்டுத்தனமான கொள்கையும், செயல் முறைப்படுத்தாத திறனும் மக்களை வாட்டின. சுமார் 20 லட்சம் மக்கள் இம்முறையில் கொல்லப்பட்டனர்.

**தொடரும் படுகொலைகள்:**
1975-ல் கிழக்குத் திமோர் மீது இந்தோனேஷியா எடுத்த படையெடுப்பு இனப்படுகொலைகளாக முன்வைக்கின்றனர். அமெரிக்க செவ்வியந்தியர்கள், பாலஸ்தீனியர்கள், காங்கோ, சோமாலியா, கொசாவா என உலக நாடுகளின் வரலாற்றில் "இனப்படுகொலைகள்" தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கின்றன என்பது நிதர்சனம்.

பரவலாக பல நூற்றாண்டுகளில் நடந்த மத மோதல்கள் ஏராளமான மக்கள் தேவையின்றி அழிவதற்கு காரணமாயின. ஒரு மதம், தான் பரவ வேண்டும் என்பதற்காக இன்னொரு மதத்தை அழித்தது.

ஆயினும் உலகில் தோன்றிய எத்தனையோ மறைநெறிகள் இந்தக் கொடுமையை தடுப்பதற்கான போதனைகளை கூறியபோதிலும், மனிதர்கள் தொடர்ந்து அதை மறந்துவிடுகிறார்கள் என்பதே நிஜமாகும்.

**ருவாண்டா இனப்படுகொலை (1994)**



ஜெர்மனியின் காலனியாதிக்கத்தின்கீழ் இருந்த நாடு ருவாண்டா, புருண்டி. இங்கு டுட்சி, ஹூட்டு என்ற இரண்டு இன குழுக்கள் வாழ்ந்து வந்தனர். பல நூற்றாண்டுகளாக டுட்சி இன மக்கள் ஆண்டுவர, பல நூற்றாண்டு காத்திருப்புக்குப் பிறகு,1972-ல் புருண்டியில் ஹூட்டுகளின் புரட்சி தொடங்கியது.

1994 ஏப்ரல் 7 அன்று ஹூட்டு இன மக்கள், டுட்சி இனத்தவரை கொல்லத் திட்டமிட்டனர். பெரியவர், சிறியவர் எனப் பாரபட்சம் இல்லாமல் அனைவரையும் கொன்று குவித்தனர் ஹூட்டு இனத்தினர். ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். நான்கு லட்சத்துக்கும் மேற்பட்டோர் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சமடைந்தனர். அத்துடன் ஆயிரக்கணக்கானோர் முடமாக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**போஸ்னியா இனப்படுகொலை**
பால்க்கன் பிராந்தியத்தில் யூகோஸ்லாவியா விடமிருந்து பிரிந்த நாடு போஸ்னியா ஆகும். 1990களில் புதிதாக உருவாக்கப்பட்ட தேசம் என்பதால் நாடு முழுவதும் குழப்பம் ஏற்பட்டது. அங்கே போஸ்னியர்கள், செர்பியர்கள், குரேஷியர்கள் என மூன்று வகையான இன மக்கள் வாழ்ந்து வந்தனர். குரேஷிய அதிபருக்கும், போஸ்னிய




அதிபருக்கும் ஓர் ஒப்பந்தத்தில் முரண்பாடு ஏற்பட, அங்கிருந்து தொடங்கியது இப்பிரச்சனை.

போஸ்னியாவில் 1993-ம் ஆண்டில் 2000 பேர் கொலை செய்யபட்டனர். 64 இஸ்லாமியர்களைக் கைது செய்து பேருந்தில் அடைத்து, தீவைத்துக் கொளுத்தினர். இதில் 56 பேர் இறந்தனர்.

செர்பிய ராணுவ ஆட்சியில் 1992-1995 காலகட்டத்தில் இரண்டு லட்சம் பேர் கொல்லப்பட்டனர். நான்கு லட்சம் பேர் காணாமல் போனார்கள்.

**டார்ஃபுர் - சூடான் இனப்படுகொலை**



ஆப்பிரிக்காவின் சூடானில் உள்ள டார்ஃபுர் மாநிலத்தில் நடைபெற்ற இப்படுகொலை பொருளாதார ரீதியாக முக்கியமானதாகும். சூடானின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகள் சண்டையிட்டுக் கொள்வதையே வழக்கமாகக் கொண்டிருந்தன. இந்நிலையில் மேற்கு சூடானில் உள்ள டார்ஃபுரில் எண்ணெய் வளம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் வடக்கு மற்றும் தெற்கு பிரச்சனை மேலும் கொளுந்துவிட்டு எரிந்தது. இவ்வாறாக 1972-ல் உள்நாட்டு யுத்தம் முடிந்து, 1983-ல் மீண்டும் துளிர்விட ஆரம்பித்தது.

கிட்டத்தட்ட 20 வருடங்களில் 20 லட்சம் பேர் உயிரிழந்தனர். 40 லட்சம் பேர் வீடுகளை இழந்து அகதிகளாகினர். தென் சூடான் தனி நாடாக ஜூலை 2011-ல் அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டது சூடான் அரசு.

**ஈழத்தில் தமிழர் படுகொலை :**



ஈழத்தமிழர்கள் மீதான இனப்படுகொலை பெரும் வலியையும், ஆற்றாமையையும் இப்போதும் எங்கள் ஈழமண் துயரங்களுடன் தேக்கி வைத்திருக்கிறது. விடியலுக்கான நீண்ட பயணம் தொடர்கிறது.

1983-ம் ஆண்டு "கறுப்பு ஜூலை" சம்பவம் இன்றளவும் நீங்காவடுவாக தமிழர்கள் மத்தியில் நிலவுகிறது. கண்ணில்பட்ட எல்லாரையும் கொன்று, பெண்கள் பலரும் பாலியல் சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட்டது டன், படுகொலையும் செய்யப்பட்டனர்.

1958, 1977, 1983-ம் ஆண்டுகளில் நடந்த இனக்கலவரங்கள் இவற்றில் குறிப்பிடத்தக்கவை. ஈழப் போராட்டம் ஆரம்பித்த பின்பு வானூர்த்திகளிலிருந்து கண்மூடித்தனமாக குண்டுவீசுதல், ஏவுகணை வீச்சு, நேரடித் தாக்குதல் போன்றவற்றின் மூலம் இதுவரை சுமார் லட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். லட்சக்கணக்கானோர் அகதிகளாயினர்.

இன்னமும் தொடரும் துயரமாக, அரசியல் மற்றும் பொருளாதார தேவைகள் மட்டுமே மனிதர்கள் அழிய காரணமாவதில்லை. பல சமயங்களில் அதைவிட சித்தாந்தம், கொள்கை, இனப்பெருமை போன்ற விஷயங்கள் பெரும்பாலான மனித அழிவிற்கு காரணமாகின்றன.

வரலாற்றில் மனித இனம் தோன்றியதிலிருந்து ஒரு இனம் மற்றொரு இனத்தை அழித்து, தனது தேவைகளுக்காக அவர்களின் சொத்துக்களை கவர்ந்து, அவர்களின் இடத்தை ஆக்கிரமித்து வாழ்ந்து வருவதானது இன்று வரையில் ஏதாவது ஒரு வடிவத்தில் தொடர்ந்து வருகிறது. மானுட தர்மம் நீதியற்று போயுள்ளதையே வரலாற்றின் துயரமாக பார்க்கலாம்.

# பொறுப்புக் கூறலை தாமதித்தால் தடைகளை விதிக்க வேண்டிவரும்.

# இலங்கை தொடர்பான அறிக்கையில் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பதில் உயர்ஸ்தானிகர் நாடா அல்நஷீப் எச்சரிக்கை.

- கடந்த கால உள்ளகப் பொறிமுறைகளின் தோல்வி குறித்து சுட்டிக்காட்டு!
- பொறுப்புக்கூறல், நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதன் அவசியம் குறித்து வலியுறுத்தல்!!



இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்கு தாமதிக்கும் பட்சத்தில், சர்வதேச விசாரணைப் பொறிமுறை உள்ளிட்ட வலுவான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டி ஏற்படும்.
மிக மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நம்பத் தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டிருப்போருக்கு எதிராக தடைகளை விதிக்க வேண்டியேற்படும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பதில் உயர்ஸ்தானிகர் நாடா அல்நஷீப் எச்சரித்துள்ளார்.
பொறுப்புக் கூறலையும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு முடிவுக்குக் கொண்டு வரப்படுவதையும் உறுதிப்படுத்தாமல் நிலைபேறான அமைதியையோ அல்லது நல்லிணக்கத்தையோ கட்டியெழுப்ப முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 வது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை கூடிய மூன்றாம் நாள் அமர்வில் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நாடா அல்நஷீப் இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பான தனது வாய்மொழிமூல அறிக்கையை வாசித்தார்.
அவர் தொடர்ந்து இலங்கை குறித்த அறிக்கையை வெளியிடுகையில், பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதை முன்னிறுத்திய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.
அண்மையில் தமிழ் அரசியற் தலைவர்களுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தியமையும், காணிவிடுவிப்பு மற்றும் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளின் பாதுகாப்பு என்பன குறித்து வழங்கிய வாக்குறுதிகளையும் வரவேற்கின்றோம்.
இலங்கையைப் பொறுத்தமட்டில் கடந்த காலங்களில் பல்வேறு ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்ட போதிலும் அவை அனைத்தும் பெரும்பாலும் தோல்வியடைந்த பொறிமுறைகளாகவே காணப்படுகின்றன.
குறிப்பாக காணாமல் போனோர் பற்றிய அலுவலகமானது பாதிக்கப்பட்ட தரப்பினரை திருப்திப் படுத்தவில்லை என்று சுட்டிக் காட்டினார். எனவே புதிதாக நியமிக்கப்படக்கூடிய எந்தவொரு பொறிமுறையும் பொறுப்புக் கூறல், நினைவுகூறல், மனித உரிமைகள் நல்லிணக்கம் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் அதேவேளை, வெற்றிகரமானதொரு நிலைமாறு கால நீதிப்பொறிமுறையாக இயங்க வேண்டியது அவசியமாகும்.
அது மாத்திரமன்றி பொறுப்புக் கூறலையும், தண்டனைகளில் இருந்து விடுபடும் போக்கு முடிவுக்கு கொண்டுவரப்படுவதையும் உறுதிப்படுத்தாமல் நிலைபேறான அமைதியையோ அல்லது நல்லிணக்கத்தையோ அடைந்து கொள்ள முடியாது.
அடிப்படை உரிமைகளை முடக்கும் வகையிலும், சிவில் இயங்கு கைக்கான இடைவெளியைச் சுருக்கும் வகையிலும் சட்டங்கள் பிரயோகிக்கப்படுதல், எதிர்ப்பு போராட்டங்களை ஒருங்கிணைந்த போராட்டத் தலைவர்கள் கைது செய்யப்படல், நகைச்சுவை பேச்சாளர்கள் கைது செய்யப்படல் ஜனாதிபதியால் பொலீசாருக்குரிய சேவையில் ராணுவத்தினர் ஈடுபடுத்தப்படல் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச் சட்டத்தின் கீழ் ஊடகவியலாளர்கள் கைது செய்யப்படல் ஆகியன தொடர்பில் கரிசனை கொண்டுள்ளோம்.
பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்துள்ள போதிலும் இன்னமும் அச்சட்டம் நீக்கப்படாமை அதிருப்தியளிக்கிறது.
தற்போது பயங்கரவாத தடை சட்டத்தைப் பதிலீடு செய்யும் நோக்கில் அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமை தொழிலாளர் உரிமை போன்றவற்றை மட்டுப்படுத்தும் வகையிலான சரத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. பயங்கரவாத தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் அதன் பிரயோகத்தை உடனடியாக இடைநிறுத்த வேண்டும். இவ்வாறான தொரு பின்னணியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் ஆதாரங்களை திரட்டும் செயல்முறை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
இச் செயன்முறையில் அடிப்படையாக பாதிக்கப்பட்ட தரப்பினரே விளங்குகின்றனர்.
ஆதாரங்களை திரட்டும் நோக்கில் பாதிக்கப்பட்டோரை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்கள் உள்ளடங்களாக பல்வேறு தரப்பினருடன் ஒன்றிணைந்து பணியாற்றி வருகிறோம்.
மேலும் இலங்கை பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்கு தாமதிக்கும் பட்சத்தில் சர்வதேச விசாரணை பொறிமுறை உள்ளிட்ட வலுவான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியேற்படும்.
மிக மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டிருப் போருக்கு எதிராக தடைகளை விதிக்க வேண்டியேற்படும் என்றார்.

**தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!**

SCAN ME



அ.நிக்ஸன்

# பணிப்பாளரின் பதவி விலகலும் பௌத்த மயமாக்கல் வியூகங்களும்

தமிழர் தாயகப் பிரதேசங்களில் 1950 களில் கல் ஓயா திட்டத்திலிருந்து 1970 களில் துரிதப்படுத்தப்பட்ட மகாவலி திட்டம் வரையிலான நீர்ப்பாசனத் திட்டங்களுடன் ஆரம்பித்த சிங்களக் குடியேற்றம், தற்போது தொல்பொருள் அகழ்வாராய்ச்சி என்ற போர்வையில், பௌத்த மயமாக்கலுக்கான வேறுபட்ட பாதையை மிக நுட்பமாகக் கையாள ஆரம்பித்திருக்கிறது.

## வாக்கு சேகரிப்பு

ஏறத்தாள பாலஸ்தீனத்தில் இஸ்ரேலிய அரசு ஆரம்பித்த யூதக் குடியேற்றங்களுக்கு ஒப்பானதாகச் சிங்களக் குடியேற்றங்கள் அரங்கேறுகின்றன.

அதுவும் 2009 மே மாதத்தின் பின்னரான குறிப்பாக நல்லாட்சி எனக் கூறப்பட்ட மைத்திரி - ரணில் அரசாங்கம் 2015 இல் இருந்து சிங்களக் குடியேற்றங்கள் உள்ளிட்ட பௌத்த மயமாக்கலை தொல்பொருள் திணைக்களம், காணி அபிவிருத்தி அதிகார சபை, மற்றும் வன வளத் திணைக்களம் ஆகியவற்றின் மூலம் சட்ட ரீதியானதாக மாற்றியிருந்தது.

2015 இல் ரணில் பிரதமராக இருந்தபோது அலரி மாளிகையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்ட தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் பௌத்த தொல்லியல் ஆராட்சியாளர்களுக்கு வடக்குக் கிழக்கு பௌத்த அகழ்வாராட்சிகள் பற்றி எடுத்துக் கூறப்பட்டிருந்தன.

சிங்கள நாளிதழ்கள் இந்தச் செய்திக்கு அன்று முக்கியத்தும் கொடுத்திருந்தன. இந்த நிலையில் கடந்த வாரம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இடம்பெற்ற சந்திப்பில் பங்குபற்றிய தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளருடன் ரணில் முரண்பட்டார் என்ற செய்தியும் அந்தச் செய்திக்குரிய மிகைப்படுத்தலும் அதிபர் தேர்தலில் தமிழர்களின் வாக்குகளைப் பெறும் நோக்கம் கொண்டவை என்பது பட்டவர்த்தனமாகிறது.

விவிலிய மற்றும் யூதத் தொன்மங்களின் அடிப்படையிலான தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளின் மூலம், இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையான மற்றும் சுதந்திரமான அரபு பாலஸ்தீனம் சியோனிச ஆக்கிரமிப்பால் திட்டமிட்டுச் சிதைக்கப்பட்டதாகப் பேராசிரியர் அமீர் அலி சென்ற வெள்ளிக்கிழமை கொழும்பு ரெலிகிராப் (colombo telegraph) ஆங்கில செய்தித் தளத்தில் எழுதிய கட்டுரையில் விபரிக்கிறார்.


தமிழர் பிரதேச பௌத்த ஆக்கிரமிப்புக்குரிய வழிமுறைகள் பற்றிக் கொழும்பில் உள்ள இஸ்ரேல் தூதரகம் இலங்கைக்கு வகுப்பெடுத்து வருகிறதா எனவும் அந்தக் கட்டுரையில் பேராசிரியர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாலஸ்தீனிய நிலங்கள் சியோனிச இஸ்ரேலால் தொடர்ந்து விழுங்கப்பட்டு வருகின்றன, அதுவும் ரஷ்ய - உக்ரைன் போர்ச் சூழலில் அமெரிக்கா போன்ற எந்த ஒரு மேற்கு நாடுகளோ அல்லது ஐரோப்பிய நாடுகளோ இஸ்ரேல் அரசிடம் எத்தகைய கண்டனங்கள் எதனையும் தெரிவிக்கவில்லை.

## அமெரிக்க - இந்திய அரசுகள்

இதேபோன்ற ஒரு சூழல்தான் வடக்குக் கிழக்கிலும் சிங்கள பௌத்த மயமாக்கலை அமெரிக்க - இந்திய அரசுகள் கண்டிக்காமல் இலங்கை கேட்கின்ற அனைத்துப் பொருளாதார உதவிகளையும் செய்கின்றன.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியம் மீள் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற வெறும் ஒற்றை வார்த்தையில் மாத்திரம் அழுத்தம் கொடுத்து விட்டு, நிதி உதவிகளை வழங்கி வருகின்றது.



தமிழ் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பௌத்த மயமாக்கல், மேலதிக இராணுவ முகாம்கள் ஆகியவற்றுக்கான செலவுகள் எங்கிருந்து எந்த அடிப்படையில் பெறப்படுகின்ற என்ற கேள்விகள் எதனையும் சர்வதேச நாணய நிதியம் முன்வைத்தாக இல்லை.

இந்த நிதியுதவிகள் இலங்கை தனித்த "ஒற்றையாட்சி அரசு" என்ற கட்டமைப்பையும் உறுதிப் படுத்துகிறது. இதை மையமாக் கொண்டே சரத்வீரகேசர, விதுர விக்கிரமநாயக்க போன்றோர் இலங்கை பௌத்த நாடு என்று துணிவுடன் சித்தரிக்கின்றனர்.

இந்தியா கூட இலங்கையிடம் எதுவுமே கேட்காது என்ற தொனியில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயரட்ன கொழும்பின் புறநகர் பகுதியான பியகம் பிரதேசத்தில் சென்ற வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் பேசியிருக்கிறார்.

## ரணிலின் இந்திய பயணம்

இந்த நிலையில் எதிர்வரும் ஜுலை 20 - 30 ஆம் திகதிகளுக்கிடையில் ரணில் இந்தியா செல்வார் என்று ஐக்கிய தேசியக் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

அதிபராகப் பதவியேற்ற பின்னர் ரணில் இந்தியாவிற்கு மேற்கொள்ளும் முதலாவது அதிகார பூர்வப் பயணம் இதுவாகும். பிரதமர் நரேந்திர மோடி, வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் இந்தியத் தேசிய பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரையும் மற்றும் இந்திய முதலீட்டாளர்களையும் ரணில் சந்திக்கவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

அதேநேரம் வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ள இயற்கைத் துறைமுகங்கள் மற்றும் அபிவிருத்திக்கும் தமது புவிசார் அரசியல் - பொருளாதார நோக்கிலும் பயன்படுத்தவுள்ள புதிய திட்டங்கள் பற்றியும் இந்திய மத்திய அரசு இலங்கையிடம் இருந்து வாக்குறுதி பெற்றிருக்கிறது.

இப் பின்னணியிலேயே ரணில் புதுடில்லிக்குச் செல்கிறாரென கொழும்பு உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன.

இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் சீனாவுக்கு எதிரான போட்டியில் அமெரிக்கா இந்தியாவைத் தன்னுடன் இணைத்துக்கொள்ள எடுத்துள்ள அத்தனை முயற்சிகளும் பலனளிக்காத நிலையில், பாகிஸ்தானுடன் தனது உறவைப் பலப்படுத்தி வரும் அமெரிக்கா, இலங்கை விவகாரத்தில் குறிப்பாக ஈழத்தமிழர்களுக்குரிய நிரந்த அரசியல் தீர்வு பற்றிய விடயத்தில் இந்தியாவைக் கடந்து வரக்கூடிய வாய்ப்புகள் இல்லை.

இது குறித்து இப் பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சீனாவுக்கு இலங்கையில் கூடுதல் முக்கியத்தும் கொடுக்கப்பட்டு வரும் திட்டங்களை, இந்தியாவைப் பயன்படுத்தி சிங்களத் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை அமெரிக்காவுக்கு உண்டு.

ஆனால் சர்வதேச போர்க் குற்ற விசாரணை அல்லது இன அழிப்பு விசாரணை அவசியம் என்ற தமிழ்தரப்பின் கோரிக்கைகளை அமெரிக்கா பரிசீலிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் இல்லாமல் இல்லை.

இருந்தாலும் அதற்குரிய ஏற்பாடுகள், உரிய ஆதாரங்களோடு தமிழ்த்தேசிய கட்சிகள் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. அதுவும் குறிப்பிட்ட சில தமிழ்த்தேசியக் கட்சிகள் இலங்கை அரசாங்கத்துடனும் இந்திய மத்திய அரசுடனும் சேர்ந்து பயணிக்க அல்லது இந்தியா சொல்வதைக் கேட்கும் நிலையில்தான் இயங்குகின்றன.

## தமிழ் தரப்பு

இந்த நிலையில் புவிசார் அரசியல் - பொருளாதாரப் போட்டிச் சூழல் ஈழத்தமிழர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்கினாலும், ஒருமித்த குரலில் முன்கொண்டு செல்லக்கூடிய அளவுக்கு அரசியல் - பொருளாதாரப் பொறிமுறைகள் வகுக்கப்படவில்லை.

ஆங்காங்கே சிறு குறிப்புகள் அல்லது ஆவணங்கள் இருந்தாலும் அனைத்துத் தமிழ்த்தேசியக் கட்சிகளும் கட்சி அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் ஒருமித்த குரலில் அதனை ஏற்கும் மனப் பக்குவத்துடன் இருப்பதாகவும் கூற முடியாது.

தமிழ்த்தரப்பின் இப் பலவீனங்களை அறிந்து கொண்ட நிலையில்தான் இந்தியா, ரணிலுடன் குறிப்பாகச் சிங்கள அரசியல் தலைவர்களுடன் முரண்பாடுகளிலும் உடன்படக்கூடிய புவிசார் அரசியல் பொருளாதார நலன்களில் கவனம் செலுத்துகிறது.

இதற்கும் அமெரிக்காவும் விதிவிலக்கல்ல. ரஷ்ய - உக்ரைன் போர்ச் சூழலில், அமெரிக்கா போன்ற வல்லரசுகள் தெரிந்தும் தெரியாத நிலையில் இருக்கும் சூழலில், பாலஸ்தீன நிலங்களை இஸ்ரேல் ஆக்கிரமித்து வருகின்றன.

ஆனாலும் சர்வதேசத்தை நோக்கிய தமது அரசியல் விடுதலைக்குரிய வழிவரைபடத்துடன் நிதானமாகவும் ஒருமித்த குரலோடும் பாலஸ்தீன கமாஸ் இயக்கம் செயற்படுகின்றது.

இதனால் விரும்பியோ விரும்பாமலே காலம் தாழ்த்தியேனும் பாலஸ்தீனயர்களின் கோரிக்கை சர்வதேச அரங்கில் நிறைவேறக்கூடிய வாய்ப்புகள் விஞ்சிக் காணப்படுகின்றன.

இவ்வாறான சூழல் அல்லது பின்னணி ஒன்றை தமிழ்த்தரப்பினர் எந்த வகையில் உருவாக்கவுள்ளனர்? அதனைக் கையாளக்கூடிய தகுதி யாரிடம் உண்டு? சிங்கள அரசியல் தலைவர்கள் போன்று சர்வதேச அரசியல் விவகாரங்களை குறிப்பாக இந்திய அரசியல் நகர்வுகளை அவதானித்துச் செயற்பட்டு வரும் தமிழ்த் தேசியக் கட்சி எது? தமிழ்த்தேசியக் கொள்கை மக்களிடம் இறுக்கமான நிலையில் உள்ளது.

ஆகவே பாலஸ்தீனம் போன்று மக்களிடம் இருந்து வழி முறைகளையும் செயற்பாட்டுத் திட்டங்களையும் பெற முடியும். அதற்குரிய விழிப்புணர்களையும் வழங்க முடியும்.

ஆனால் தேர்தல் அரசியல் முறைமைக்குள் சிக்குண்டதால், இலங்கை ஒற்றையாட்சி நாடாளுமன்றத்தில் தமது கட்சி ஆசனங்களை அதிகரிப்பதிலும் வாக்குகளைப் பெறும் நோக்கில வியூகங்கள் வகுப்பதிலுமே காலம் செல்கிறது.

கட்சி வளர்ச்சிக்குத் தேவையான வியூகங்களுக்குள் மக்களைக் கவரும் நோக்கில், இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு எதிரான பரபரப்புப் போராட்டங்களுக்குரிய அரசியல் வேலைத் திட்டங்களையே வடக்குக் கிழக்கில் காண முடிகிறது.

நிவாரணம் வழங்கும் அரசியலுக்கும் குறைவில்லை. இதற்குத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் விதிவிலக்கல்ல.

## ஒற்றையாட்சி அரசு



2009 இற்குப் பின்னரான சூழலில் இலங்கைத்தீவு ஒற்றையாட்சி அரசு என்பதை மேலும் உறுதிப்படுத்தும் சிங்களத் தலைவர்களின் அரசியல் வேலைத் திட்டங்கள் தற்போது, கட்சி அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் முழுமையடைந்து வருகின்றன.

அமெரிக்க, இந்திய மற்றும் சீன அரசுகள் தமக்கிடையே ஏட்டிக்குப்போட்டியான காரியங்களில் ஈடுபட்டாலும் இலங்கை ஒற்றையாட்சி என்பதை ஏற்றுள்ளதாக முன்னாள் அதிபர் கோட்டாபய ராஜபக்ச சென்ற ஆண்டு பொருளாதார நெருக்கடியின்போதும் பகிரங்கமாகப் பெருமையோடு கூறியிருந்தார்.

2021 இல் கண்டியில் ஞானசார தேரர், இலங்கை பௌத்த சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தம் என்று பகிரங்கமாகப் பிரகடனம் செய்தபோது, மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர மாத்திரமே அதனைக் கண்டித்திருந்தார்.

ஆனால் தற்போதைய அதிபர் ரணில் விக்கிரமசிங்க உட்பட எந்த ஒரு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஞானசார தேரரின் அந்தக் கருத்தை அப்போது கண்டிக்கத் துணியவில்லை.

**தமிழர் தாயகப் பிரதேசங்களில் 1950 களில் கல் ஓயா திட்டத்திலிருந்து 1970 களில் துரிதப்படுத்தப்பட்ட மகாவலி திட்டம் வரையிலான நீர்ப்பாசனத் திட்டங்களுடன் ஆரம்பித்த சிங்களக் குடியேற்றம், தற்போது தொல்பொருள் அகழ்வாராய்ச்சி என்ற போர்வையில், பௌத்த மயமாக்கலுக்கான வேறுபட்ட பாதையை மிக நுட்பமாகக் கையாள ஆரம்பித்திருக்கிறது. ஆனால் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் பதவி விலகல் விவகாரத்தில் ரணிலை தமிழ்த்தேசியக் கட்சி உறுப்பினர்கள் சிலர் பாராட்டியுள்ளமைதான் வேடிக்கை**

இந்த நிலையில் இலங்கைத் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் பேராசிரியர் அனுர மானதுங்கவுடன் முல்லைத்தீவு தொல்பொருள் அகழ்வாராய்ச்சி தொடர்பாக ரணில் தர்க்கப்பட்டார் என்றும், அதனால் பணிப்பாளர் தனது பதவியில் இருந்து விலகினார் எனவும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் புகழாரம் சூட்டுவதுதான் வேடிக்கை.

மகிந்த ராஜபக்ச வடக்குக் கிழக்குத் தயாகப் பகுதிகளுக்குச் செல்லும்போதெல்லாம் இலங்கைத்தீவில் உள்ள எந்த ஒரு மாகாணமும் மாவட்டமும் குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்ததாக இருக்கக்கூடாது என்று மார்தட்டியிருக்கிறார்.

அவ்வாறு கூறிய மகிந்தவின் சிறிலங்கா பொது ஜனப் பெரமுனக் கட்சியின் நூற்றி இருபத்து எட்டு உறுப்பினர்களின் ஆதரவுடன்தான் ரணில் அரசாங்கத்தை அமைத்துள்ளார்.

இந்த நிலையில் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் பதவி விலகியதும் கண்டி மகாநாயக்கத் தேர்களைச் சந்தித்த பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர், ரணிலுக்குப் பௌத்த சமயத் தொல்பொருள் பற்றிப் பேச அருகதையில்லை என்று கூறியதுடன், வடக்குக் கிழக்கில் உள்ள பௌத்த தொல்பொருள் சின்னங்களைத் தமிழ்ப் பயங்கரவாதிகளிடம் அடகுவைக்கப் போகிறார் என்றும் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியிருக்கிறார்.

# ஐந்து கட்சி - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காக அரசியற் குருஷேத்திரம் காத்திருக்கின்றது..!

கூட்டமைப்பில், தமிழரசுக் கட்சி தொடர்ந்து மேலாதிக்கம் செய்ய முனைந்து நிற்பதை நிராகரித்து, சமீப காலமாக எதிர்ப்பை வெளியிட்டு வந்திருக்கும் ஏனைய இரண்டு கட்சிகளான ரெலோ மற்றும் புளொற் என்பன, உள்ளூராட்சித் தேர்தலில் தனித்து போட்டியிடுவது என்ற தமிழரசுக் கட்சியின் அதிரடி முடிவினால் கடும் அதிருப்திக்கு ஆளாக்கப்பட்டன.

தமிழரசுக் கட்சியின் பிடிவாதப் போக்கினால், பிரச்சனை விஸ்வரூபம் எடுத்திருந்த நிலையில், ரெலோவும், புளொற்றும் தாமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற நிலைப்பாட்டை, பதிலடியாக முன்வைத்தன!

**தனித்து போட்டியிடுவதால் தமிழ்த் தேசிய ஒற்றுமைக்கும், பல்வேறு உள்ளூராட்சி சபைகளில் தமிழ்த் தேசிய சக்திகளுக்கும் ஏற்படக் கூடிய, பாதகமான எதிர் விளைவுகளைப்பற்றி கிஞ்சித்தேனும் கவலைப்படாமல், தமிழரசுக் கட்சி எடுத்த தனி வழி செல்லும் முடிவுக்கு, அதிர்ச்சி வைத்தியம் அளிக்கும் விதத்தில், இரண்டு கட்சிகளும், கூட்டமைப்புக்கு வெளியே நின்று வந்திருக்கும் சில தமிழ்த் தேசியக் கட்சிகளை கூட்டமைப்பில் இணைத்துக் கொள்ள விரும்பின.**

இந்த அடிப்படையில், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சி என்பனவற்றுடன் பேச்சுவார்த்தை நடாத்தி, கூட்டமைப்பில் இந்த மூன்று கட்சிகளையும் இணைத்து, அதனை விஸ்தரிக்கும் முடிவுக்கு ரெலோவும், புளொற்றும் வந்தன.

அதன் விளைவாக, ஐந்து கட்சிகளைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இந்த வருட ஆரம்பத்தில் பிரகடனப்படுத்தப்பட்டது.

அத்துடன், மங்களகரமான குத்து விளக்கு சின்னத்தில், உள்ளூராட்சி தேர்தலில், வட கிழக்கு மாகாணங்களில், சிங்கள குடியேற்றப் பகுதிகளும் மற்றும் முஸ்லிம் பிரதேசங்களும் தவிர்ந்த, மிகுதி இடங்கள் அனைத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டனர்.

வேட்பாளர் நியமனம் தொடர்பில், தமக்கு இடையிலான தொடர் பேச்சுவார்த்தைகளை ஒரு சில தினங்களுக்குள் நிறைவு செய்து கொண்டு, தமிழ் மக்கள் பிரதிநிதித்துவம் பெறக்கூடிய அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் கூட்டமைப்பு தனது வேட்பாளர்களை அறிவித்தது.

அத்துடன், வேட்பாளர் அறிமுக கூட்டங்களை தமிழ் மாநிலத்தின் சகல மாவட்டங்களிலும் முதலில் நடாத்திய கூட்டமைப்பு, தொடர்ந்து அவற்றை கிராம மட்டங்களுக்கும் விஸ்தரிக்கத் தொடங்கியது.

தமிழரசுக் கட்சியை எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் தோற்கடித்தே தீருவது என்ற வைராக்கியத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு களமிறங்கிய அதேநேரத்தில், எதிர்ப் பக்கத்தில் தமிழரசுக் கட்சியின் பிரசாரம் மந்த கதியிலேயே நகர்ந்து கொண்டிருந்தது.

இதற்கான முக்கிய காரணம், தனித்துப் போட்டியிடுவது என்ற தமிழரசுக் கட்சியின் தீர்மானம், தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்த அதிருப்தி அலைகளும், அந்த அலைகளின் தாக்கத்தினால் தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்ட தடுமாற்ற உணர்வுகளுமே ஆகும்.

இந்தச் சூழ்நிலையில், உள்ளூராட்சித் தேர்தலை அரசாங்கம் திடீரென ஒத்தி வைத்தது.

இதனால் தமிழரசுக் கட்சிக்கு தேர்தலில் ஏற்பட்டிருக்கக்கூடிய பாரிய பின்னடைவு தவிர்க்கப்பட்டது. தேர்தல் பிரச்சாரம் உருவாக்கியிருந்த அரசியற் சூடும் தணிந்தது.

இந்த நிலையில், தமிழ் அரசியற் கட்சிகள் தமக்கு இடையிலான தேர்தல் தழுவிய போட்டிகளையும், பூசல்களையும் ஒதுக்கி வைத்து விட்டு, தமிழர் தேசத்தின் விடிவுக்காக, ஆக்க பூர்வமானதும் ஆரோக்கியமானதுமான முடிவுகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் ஒரு கால அவகாசத்தை, அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும், இந்த தேர்தல் ஒத்தி வைப்பு கையளித்திருந்தது.

**தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்தமட்டில், அதன் தனிவழிப் போக்கு தரக்கூடிய ஆபத்துக்களை அடிமட்டத் தொண்டர்களும், இடைநிலைத் தலைவர்களும் உணர்ந்து கொண்டிருந்த அளவுக்கு, மேல்மட்டத்தில், கட்சியின் தலைமைத்துவத்துடன் இயல்பாகவே இணைத்து பார்க்கப்படும் முன்னணிப் பிரமுகர்கள் மற்றும் தலைவர்கள் மத்தியில், இரண்டு மூன்று பேர்களைத் தவிர, ஏனையோரிடம் பெரிதாக எதுவும் காணப்படவில்லை என்பது வேதனைக்குரிய விடயம்.**

மீண்டும் உட்கட்சி முரண்பாடுகளும், கோஷ்டிச் செயற்பாடுகளும் தமிழரசுக் கட்சிக்குள் வெளிக்கிளம்ப ஆரம்பித்திருந்த வேளையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தம்மை பிரகடனப்படுத்தியிருந்த ஐந்து கட்சிகளும், தமது கட்சித் தலைவர்கள் மற்றும் முன்னணிப் பிரமுகர்களுக்கிடையில், கூட்டுச் சந்திப்புகளை முன்னெடுக்கத் தொடங்கியிருந்தும், போதுமான வேகம் அதில் இருந்திருக்கவில்லை.

> **“ தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் செயற்பட்டு கொண்டிருக்கும் 10 அரசியல் கட்சிகள், கிட்டத்தட்ட ஒரே குறிக்கோளையே தமது அரசியல் இல க்காக கொண்டிருந்தாலும், ஓரணியாக ஒன்று பட முடியாமல், அவை பிரிந்து நின்று கொண்டிருப்பதே, தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில், நீண்ட கால அரசியல் குறைபாடாகவும், முறையீடாகவும் இருந்து வந்திருக்கின்றது. ”**

இந்தச் சூழ்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அமைப்பு விதிகளை உள்ளடக்கிய ஒரு யாப்பினை தயாரித்து, கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாக பதிவு செய்வதற்கு என எடுக்கப்பட்டிருந்த முயற்சிகள், கடந்த சில வாரங்களில் விரைவுபடுத்தப்பட்டதன் விளைவாகத்தான், கடந்த 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரில், கூட்டமைப்பின் ஐந்து கட்சிகளின் சார்பிலும், தலா மூவர் வீதம், மொத்தம் 15 பிரதிநிதிகள் கலந்து கொண்டு, ஏற்கனவே அடிப்படை இணக்கம் காணப்பட்டிருந்த யாப்பினை இறுதி செய்து, ஓர் நிர்வாகக் கட்டமைப்பையும் தெரிவு செய்திருக்கின்றனர்.

சுழற்சி முறையில், ஒவ்வொரு கட்சியும், குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்கு, கூட்டமைப்பின் தலைமையை தாங்குவது என்று ஆரம்பத்தில் முன்மொழியப்பட்ட யோசனை, கலந்தாலோசனைக்குப் பிறகு புறம் தள்ளப்பட்டு, அதற்கு பதிலாக, ஐந்து கட்சிகளின் தலைவர்களையும் உள்ளடக்கிய கூட்டுத் தலைமை என்ற ஏற்பாடு, கூட்டமைப்பின் யாப்பில் இப்போது உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஐந்து கட்சிகளின் தலைவர்களும் கூட்டாக, தலைமைத்துவத்தை வழங்குவார்கள்.

அதே நேரத்தில், கூட்டமைப்பின் அரசியற் செயற்திட்டங்கள் எல்லாம், ஐந்து கட்சிகளின் பிரதிநிதி களைக் கொண்ட, உயர்பீடமான, நிறைவேற்றுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டு செயற்படுத்தப்படும் என்ற கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டு, அமைப்பு விதிகளில் உள்ளீர்க்கப்பட்டுள்ளது.

**ஒவ்வொரு கட்சிக்கும் தலா நான்கு பிரதிநிதிகள் வீதம், மொத்தம் 20 உறுப்பினர்கள் நிறைவேற்றுக் குழுவில் இடம்பெறுவார்கள். என்பதோடு, ஒவ்வொரு கட்சியும் தனது பிரதிநிதிகளில் குறைந்தது ஒரு பெண் உறுப்பினரையாவது கொண்டிருக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டிருக்கின்றது.**

**மேலும், கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் என்ற பொறுப்பினை வகிப்பவர், நிர்வாக நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பவராகவும், தேர்தல் திணைக்களத்துடன் கூட்டமைப்பின் சார்பில் தொடர்புகளையும், தொடர்பாடல்களையும் மேற்கொள்பவராகவும் இருப்பார் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.**

**இந்த அடிப்படையில் நோக்கினால், ஐந்து கட்சிகளின் கூட்டமைப்பு என்பது, பரந்துபட்டதோர் ஜனநாயக அடித்தளத்தின் மீது, தன்னை ஒரு மக்கள் இயக்கமாக கட்டி எழுப்பவும், கட்டுக்கோப்புடன் கூடிய தமிழ்த் தேசிய அரசியல் சக்தியாக எழுச்சி பெறவும், ஏற்ற விதத்தில், ஆரோக்கியமான அரசியல் முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.**

தமிழரசுக் கட்சியின் மேலாதிக்கப் போக்கினால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில், கடந்த காலத்தில் ஏற்பட்ட அனாவசியமான பிரச்சனைகள், அர்த்தமற்ற முரண்பாடுகள் என்பனவற்றோடு, தனிநபர் ஆதிக்கப்போக்கும் தலை எடுத்த சூழ்நிலை, தந்திருந்த அனுபவப் பாடத்தை கருத்தில் எடுத்து, காத்திரமான விதிமுறைகள் திட்டவட்டமான வார்த்தைகளில் கூட்டமைப்பின் கட்டமைப்பினை வடிவமைத்து நிற்கின்றன.

இப்பொழுது கூட்டமைப்பின் தலைமைத்துவம் தொட ர்பில் ஒரு சில வார்த்தைகள்.

கூட்டமைப்புக்கு இப்பொழுது ஐந்து தலைவர்கள் - பாரதக் கதையில் வரும் பஞ்சபாண்டவர்களைப் போல!

இந்த தலைவர்களை பஞ்சபாண்டவர்களாக, ஒரு கணம் கற்பனை செய்து பார்த்தால் என்ன? என்ற சிந்தனை இந்த கட்டுரையாளருக்கு ஏனோ ஏற்பட்டுள்ளது.

இந்த ஐந்து தலைவர்களையும் பஞ்சபாண்டவர்களாக உருவகித்தால், அவர்களில் முதல்வரான யுதிஷ்டிரன் எனப்படும் தர்மபுத்திரன் யாராக இருக்க முடியும்?

இவர்களில் ஒருவரின் பெயரிலேயே பதிலும் இருக்கின்றது! அந்த அவர், தர்மலிங்கம் சித்தார்த்தன்!!

இன்றைய நிலையில், கூட்டமைப்பை, தனி ஒருவர் தலைமை தாங்கி வழி நடாத்த வேண்டும் என்றால், மற்றத் தலைவர்கள் அனைவரையும் விட சித்தார்த்தனிடம் ஒரு தனித் தகுதி உண்டு. அது, அனைவரையும் அணைத்து செல்லும் பொறுமை! அந்த வகையில் அவர்தான் எமது பஞ்சபாண்டவர்களில் முதல்வர்! வயதிலும் கூடத்தான்!!

74 வயதில் நின்று கொண்டிருக்கும் சித்தார்த்தனை அடுத்து, இப்பொழுது, இந்த பஞ்ச பாண்டவர்களில் இரண்டாவதாக பேசப்பட வேண்டிய, பீமசேனன் எனப்படும் பீமன் யாராக இருக்கலாம்?

அரசியல் பிரச்சார மேடைகளில், ஈவிரக்கம் சிறிதுமின்றி, எதிரணிகளை பிய்த்து உதறும் ஆக்ரோஷத்தின் அடிப்படையில், 73 வயதுடைய சிறீகாந்தாவே அந்த வகிபாகத்துக்கு தகுதியானவர்.

மூன்றாவது அர்ஜுனன்!. அதற்கான தகுதி யாருக்கு என்று முடிவு செய்வதிலும் சிக்கல் இல்லை.

தனது வில்லின் வலிமையால் எதிரிகளின் கணைகளை சிதறடித்த அர்ஜுனனைப் போலவே, தனது 66 ஆவது வயதில், சொல்லின் வலிமையால், ஊடகவியலாளர்களின் கேள்விக்கணைகளை லாவகத்துடன் எதிர் கொள்ளும் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன், அந்த வகிபாகத்திற்கு முற்றிலும் தகுதியானவர்.

அடுத்து, பஞ்ச பாண்டவர்களில், அழகுக்கு நகுலன் என்று பேசப்படும் அந்த பாண்டு புத்திரனுக்கு யாரை ஒப்பிடலாம்?

தனது கம்பீரமான தோற்றத்தால் மட்டுமன்றி, கவர்ச்சிகரமான புன்னகையாலும் காண்போரை வசப்படுத்துபவர், 63 வயதினை சமீப நாட்களில் எட்டிப் பிடித்திருக்கும் செல்வம் அடைக்கலநாதன்! பாண்டவர்களின் நான்காமவரான நகுலனுடன் ஒப்பிடப்பட அவரே பொருத்தமானவர்.

இப்போது பஞ்சபாண்டவர்களில் எஞ்சி இருக்கும் சகாதேவன்! பாண்டவர்கள் அனைவரிலும் ஆக இளையவர். அவருடன் ஒப்பிட்டு உருவகிக்க, இந்த ஐந்து தலைவர்களில் எஞ்சியிருக்கும், ஜனநாயகப் போராளிகள் கட்சித் தலைவர் வேந்தன், வயதாலும், குணத்தாலும் தகுதியானவரே!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணைத் தலைவர்களான ஐவரிலும், மிக இளையவரான, 40 வயதுடைய வேந்தனைத் தவிர்த்து, ஏனைய நால்வரும் மிக நீண்டகால அரசியல் அனுபவம் கொண்டவர்கள்.

1960ஆம் ஆண்டில், நான்கு மாதகால இடைவெளியில், நிகழ்ந்த இரண்டு பாராளுமன்ற பொதுத்தேர்தல்களின் பின்னணியில், அன்றைய தமிழரசுக் கட்சியின் பிரச்சார நடவடிக்கைகள் ஊடாக, பாடசாலைச் சிறுவர்களாக அரசியல் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட சித்தார்த்தனும், சிறீகாந்தாவும், கடந்த 60 வருடங்களுக்கு மேலாக, தொடர்ச்சியாக தமிழ்த் தேசிய அரசியல் களத்தில் நிலை கொண்டு வந்துள்ளவர்கள்.

சுரேஷ் பிறேமச்சந்திரனைப் பொறுத்தமட்டில், 1970 பொதுத் தேர்தலே அவரின் அரசியல் ஈடுபாட்டுக்கு கிளிநொச்சித் தொகுதியில் அடிகோலியது.

செல்வம் அடைக்கலநாதன் தனது பதின்ம வருடங்களின் நடுப்பகுதியில், ரெலோ முன்னோடிகள் - தலைவர்கள் தங்கத்துரை, குட்டிமணி இணையால் ஈர்க்கப்பட்டு, தனது கல்வியையே இடைநடுவில் தொலைத்தவர். தேச விடுதலைக்கான போராட்டத்தில், மாணவப் பருவத்தில், 70களின் நடுப்பகுதியில், இணைந்து கொண்டவர்.

வேந்தனைப் பொறுத்தமட்டில், யுத்தத்தின் முடிவைத் தொடர்ந்து, ஆயுதப் போராட்டக் களத்திலிருந்து ஜனநாயக அரசியல் நீரோட்டத்திற்கு அவர் வந்துள்ளார். அவரின் கட்சியும் வந்துள்ளது.

**இந்நிலையில், பஞ்சபாண்டவர் பற்றிய ஒப்புவமை வெறுமனே சுவாரசியத்திற்காக மட்டும் அல்ல!**

**கடுமையும், கசப்பும் மேலோங்கி நிற்கும் தமிழ்த் தேசிய அரசியல் விவகாரங்கள் பற்றிய அலசல்களில், சுவாரசியத்திற்கும் சற்று இடம் வேண்டும் தான்! ஆனால், அதற்கப்பால், நாம் சொல்ல வருவது வேறொரு விடயம் - மிக முக்கியமான விடயம்!**

**பஞ்சபாண்டவர்கள் சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும் மத்தியிலும், சதிகளுக்கும் சவால்களுக்கும் நடுவிலும், ஒற்றுமையுடனும், உறுதியுடனும் துணிந்து நின்றார்கள் - இறுதியில் வென்றார்கள்.**

**இந்த உண்மையை கூட்டமைப்பின் ஐந்து தலைவர்கள் மட்டுமன்றி, அவர்களால் வழி நடாத்தப்படும் கட்சிகளில், அடுத்த தலைமுறைக்கு உரிய தலைவர்களான, அனைத்து அரசியல் அதிரதர்களும் தங்கள் மனதில் ஆழமாகப் பதித்துக் கொள்வது அவசியமானது.**

**ஏனெனில், அரசியல் குருஷேத்திரம், இவர்கள் அனைவரையும் உள்ளடக்கிய, ஐந்து கட்சி - தமிழ்த் தேசியக் கூட்மைப்புக்காக பொறுமையோடு காத்திருக்கின்றது.......!**

**தமிழ்த் தேசியத்தின் ஜன்ம விரோதிகளும், தடம் மாறிப்போன தேசத்துரோகிகளும், செஞ்சோற்றுக் கடன் தீர்க்க வேண்டிய நிலையிலுள்ள பல செந்தமிழர்களும் அங்கே அணி வகுக்க ஆரம்பித்திருக்கின்றார்கள்..!**

**ஆம்! குருஷேத்திரம் காத்திருக்கின்றது.!!**

அஜாத சத்துரு

# இலஞ்சமாக வழங்கப்பட்டதா வட மாகாண ஆளுநர் பதவி!!



"தேர்தல் ஆணைக்குழுவில் இருந்து தற்போதைய வடக்கு மாகாண ஆளுநர் பதவி விலகியமை அரசியல் இலஞ்சம் என குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

வடக்கு ஆளுநரின் நியமனம் தொடர்பிலும், ஆளுநராக வருவதற்கு அவர் மேற்கொண்ட இராஜதந்திர நகர்வுகள் பற்றியும் சில தகவல்கள் வெளிவந்துள்ளன.

" உள்ளூராட்சி சபை தேர்தல் அண்மித்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில், அதிபர் ரணிலை கைப்பொம்மையாக பாவித்து தேர்தல் ஆணைக்குழுவில் இருந்து பதவி விலகி, வட மாகாண ஆளுநர் பதவியை அரசியல் இலஞ்சமாக பெற்றுக்கொண்டுள்ளார்."

இப்படியாக குற்றச்சாட்டை ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச்செயலாளர் உமாசந்திரா பிரகாஷ் ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலில் முன்வைத்துள்ளார்.

"தேர்தலை பிற்போடுகின்ற அல்லது பின்னடிக்கின்ற ஒரு நடவடிக்கையின் உத்தியாக ரணில் மேற்கொண்ட செயல்பாடுகளின் விளைவே இந்த ஆளுநர் மாற்றங்கள்.

அதன் விளைவாகவே தற்போதைய வடக்கு ஆளுநர் பதவிக்கு வந்துள்ளார். ரணில் விக்ரமசிங்க அரசியல் ரீதியிலான இப்படியான நகர்வுகளை மேற்கொள்வது மக்களுக்கு புதிதல்ல, ஆனால் இதன் மூலம் யார் யாரெல்லாம் எவ்வாறான சலுகைகளை பெறுகின்றார்கள் என்பது முக்கியம்.

மக்களின் ஜனநாயக உரிமைகள் இப்படி எல்லாம் மறுக்கப்படுகிறது, இருந்தாலும் மக்கள் இதற்கான பதிலை விரைவில் கூறுவார்கள்.

எதோ ஒரு சந்தர்ப்பத்தில் தேர்தல் வரும் பொழுது இதற்கான பதில் நிச்சயம் கிடைக்கும்.

தேர்தல் ஆணைக்குழுவில் இருந்து பதவி விலகியமைக்காக கொடுக்கப்பட்ட இலஞ்சத்தை பதவியாக பெற்றுக்கொண்டவரே தற்போதைய வடக்கு ஆளுநர்.

அவர் நிச்சயம் பெற்றிருக்கக் கூடாது, வடக்கு மாகாண ஆளுநர் பதவியை பெறுவதற்காகவே தேர்தல் ஆணைக்குழுவில் இருந்த பதவியை இழந்தது உண்மை.

ஒரு பதவியை பெறுவதற்காக இன்னுமொரு பதவியை இழந்து இருப்பது மக்கள் நலன் சார்ந்த விடயமாக எடுத்துக்கொள்ள முடியாது.

ஏனெனில், ஆளுநர் பதவியை விட ஜனநாயக முறைமையோடு சம்பந்தப்பட்ட தேர்தல் ஆணைக்குழுவின் பதவியென்பது முக்கியமான ஒன்று.

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் எனும் முக்கியமான பதவியை துறந்து, இந்த ஆளுநர் பதவியை இலஞ்சமாக பெற்றுக்கொண்ட அம்மையாரை நான் கவலையோடு பார்க்கிறேன்." இவ்வாறு தனது குற்றச்சாட்டை உமாசந்திரா பிரகாஷ் முன்வைத்துள்ளார்.

# மட்டக்களப்பு மாநகர சபையின் பதிய ஆணையாளர் கடமைகளைப் பொறுப்பேற்றார்!!!



மட்டக்களப்பு மாநகர சபையின் 24 ஆவது ஆணையாளராக பொறியியலாளர் நடராஜா சிவலிங்கம் கடந்த வியாழக்கிழமை மாநகர சபை அலுவலகத்தில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கிழக்கு மாகாண ஆளுநரால் பொறியியலாளர் நடராஜா சிவலிங்கம் அவர்களுக்கு குறித்த நியமனம் வழங்கப்பட்டதுடன், அன்றைய தினம் காலை அலுவலகத்திற்கு சமூகமளித்த புதிய மாநகர ஆணையாளர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள ஆலயத்தில் சமய வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் கடமையினைப் பொறுப்பேற்றார்.

இதனையடுத்து மாநகர உத்தியோகத்தர்களுடனான சம்பிரதாயபூர்வமான சந்திப்பொன்று நகர மண்டபத்தில் இடம்பெற்றது. இச் சந்திப்பில் மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் என்.மதிவண்ணன், மாநகரப் பொறியியலாளர் திருமதி எல். சித்திரா தேவி, பிரதம கணக்காளர் திருமதி ஜீ.எச்.சிவராஜா உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கை நிருவாக சேவை (தரம் -1) உத்தியோகத்தரான இவர் மன்னார் மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள பிரதி ஆணையாளராகவும், மட்டக்களப்பு மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள பிரதி ஆணையாளராகவும், உலக வங்கி திட்டத்தி சிமாட் கிலைமட் ஸ்ரீ லங்கா திட்டப் பணிப்பாளராகவும், கிழக்கு மாகாணக் கல்விப் பணிமனையின் பிரதிப் பணிப்பாளராகவும், கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளராகவும் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் திருகோணமலை மற்றும் வவுனியாவில் பல்வேறு உதவித்திட்டங்கள்.









யாழ்ப்பாணம் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினால் திருகோணமலை மற்றும் வவுனியாவில் பல்வேறு உதவித் திட்டங்கள் புதன்கிழமை வழங்கி வைக்கப் பட்டன.

திருகோணமலை செல்வநாயகபுரம் பிரதேச வைத்தியசாலையில் மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் வைத்திய சாலையின் கோரிக்கைக்கு அமைவாக 505, 400ரூபா பெறுமதியான மருந்து வகைகள் வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் சத்தியசீலனிடம் சந்நிதியான் ஆச்சிரமத்தின் மோகனதாஸ் சுவாமிகள் அவர்கள் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.

இதேவேளை வவனியா கல்லாறு ஸ்ரீ சித்தி விநாயகர் வித்தியாலயத்திற்கு 440, 520 ரூபா நிதிப்பங்களிப்பில் குழாய்க்கிணறு அமைத்து குடிநீர் வசதி ஏற்படுத்திக்கொடுக்கப் பட்டுள்ளது.

இவ் உதவித் திட்ட நிகழ்வில் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாகச் சென்று கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் சிவில்சமூக செயற்பாட்டாளர் இ.தயாபரன் மற்றும் ஆச்சிரம தொண்டர்களும் கலந்துகொண்டனர்.

# உள்ளக விசாரணையில் ஒருபோதும் நீதி கிடைக்காது : கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி



பொறுப்புக் கூறல் விவகாரத்தில் இலங்கை மந்தகரமாகவே செயற்படுகிறது. சுதந்திரமான விசாரணை முன்னெடுக்கப்படுவது சந்தேகத்துக்குரியது என்பதை உலக நாடுகள் இன்று ஏற்றுக்கொண்டுள்ளன.

உள்ளக விசாரணையில் ஒருபோதும் நீதி கிடைக்காது என்பதை தொடர்ந்து வலியுறுத்துகிறோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது.

தீவிரமடைந்துள்ள ஊழல் மோசடியால் இலங்கை புகழோடு வீழ்ச்சி நிலைக்கு செல்கிறது. நீதிதுறையின் பாதுகாப்பு மற்றும் சுயாதீனத் தன்மை தொடர்பில் பாரிய சந்தேகம் காணப்படுகிறது. இயற்றப்படும் சட்டங்களினால் சமூக கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதை அவதானிக்க வேண்டும். ஆகவே இயற்றப்படும் சட்டங்கள் வெறும் காட்சிப்பொருளாகவே காணப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடர் தற்போது இடம்பெறுகிறது. பொறுப்புக் கூறல் விவகாரத்தில் இலங்கை மீது நம்பிக்கை கொள்ள முடியாத தன்மை காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வாய்மூல அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொறுப்புக் கூறல் விவகாரத்தில் இலங்கை மந்தகரமாகவே செயற்படுகிறது. சுதந்திரமான விசாரணை முன்னெடுக்கப்படுவது சந்தேகத்துக்குரியதே என உலக நாடுகளும் இன்று ஏற்றுக்கொண்டுள்ளன. உள்ளக விசாரணையில் ஒருபோதும் நீதி கிடைக்காது என்பதை தொடர்ந்து வலியுறுத்துகிறோம்.

மருதங்கேணி பகுதியில் எனக்கும், பொலிஸாருக்கும் இடையில் இடம்பெற்ற கருத்து முரண்பாடு அதனை தொடர்ந்து நான் கைது செய்யப்பட்டமை தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை பாரிய சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நிறைவு பெறுவதற்கு முன்னர் அவர் பொலிஸாரை பாதுகாக்கும் வகையில் செயற்படுகிறார் என்பது தெளிவாக விளங்குகிறது. ஆகவே இவ்வாறான தன்மை முழுமையாக மாற்றமடையும் வரை ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது என்றார்.

# குருந்தூர் மலையில் அப்பட்டமான அரச சர்வாதிகாரம்

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்

தமிழர்களின் தொன்மைவாய்ந்த தொல்லியல் களை சிங்கள பௌத்தமாக மாற்றியமைப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் தனது அரச இயந்திரத்தை சர்வாதிகாரமாக வழி நடாத்தி தமிழர்களின் இருப்பை அழிக்க பல முனைகளிலும் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

இலங்கைத்தீவில் ஆரம்பத்தில் அனுராதபுரத்தை ஆண்ட முத்துசிவன் மன்னனின் மகன் தீசன்(தேவநம்பியதீசன்) என்கிற தமிழ் மன்னன் காலத்தில் தான் பௌத்தம் கொண்டு வரப்பட்டது என்ற உண்மையை மகாவம்சத்தின் பாளி மொழியிலான மூலப் பிரதி கூறியுள்ளதை மறைத்து உண்மையான தமிழ்ப் பௌத்த தொல்லியல் அடையாளங்களை சிங்கள பௌத்தமாக மாற்றும் எதேச்சதிகார நடவடிக்கைகளையே பேரினவாத ஆட்சியாளர்களும் தொடரந்து மேற் கொள்கின்றனர்.

தீசன் என்ற பெயரை திஸ்ஸ என சிங்களத்தில் பிற்காலத்தில் மாற்றியது போலவே அனுராதபுரத்தில் இருந்து வடகிழக்கு மாகாணங்கள் முழுவதும் தமிழ் மன்னர்கள் ஆண்ட போது சைவ ஆலயங்களுடன் தமிழ் பௌத்தமும் பரவி இருந்தது அவ்வாறான தொன்மைகளை தற்போது சிங்கள ஆட்சியாளர்கள் சிங்கள பௌத்தமாக மாற்றியமைக்கும் செயற்பாடு தமிழின அழிப்புக்கு வலுச் சேர்க்கும் பாரிய ஆபத்தாக தமிழர் தாயகத்தில் மாறியுள்ளது.

குருந்தூர் மலையில் தொல்லியல் திணைக்களம் மேற்கொண்ட செயற்பாடு சட்டத்திற்கு முரணானது என்பதை நீதிமன்ற தடையே மிகப் பெரும் ஆதாரம் அதனை மீறி இராணுவத்தை முழுமையாக பயன்படுத்தி நீதிமன்றத்தை அவமதித்து விகாரையை கட்டி முடித்து இராணுவம் அமைத்ததாக பெயர்ப் பலகை இடப்பட்டுள்ளது என்றால் தமிழர் தாயகத்தில் திட்டமிட்டு நடைபெறும் அடக்கு முறைகளுக்கு மிகப் பெரும் ஆதாரம் ஜனநாயகம் என்ற பெயரில் நடைபெறும் அரச சர்வாதிகாரம்.

### மூதூரில் அரசசார்பற்ற அமைப்பின் பணியாளர்கள் படுகொலை :

## நீதி வழங்குமாறு இலங்கை ஜனாதிபதியிடம் பிரான்ஸ் ஜனாதிபதி வேண்டுகோள் விடுக்கவேண்டும்!

# நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்





இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மைக்ரோன் சந்திக்கும்போது 2006 ம் ஆண்டு இலங்கையின் அக்ஷன் பார்ம் அரசசார்பற்ற அமைப்பின் பணியாளர்கள் கொல்லப்பட்டமைக்கு பொறுப்புக்கூறப்படவேண்டும் என பிரான்ஸ் ஜனாதிபதி வேண்டுகோள் விடுக்கவேண்டும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விஸ்வநாதன் ருத்ரகுமாரன் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

2006ம் ஆண்டு பிரான்சை சேர்ந்த அக்ஷன் பார்ம் அரசசார்பற்ற அமைப்பின் 17 பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்தே நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் இந்தவேண்டுகோளை விடுத்துள்ளார்.

ஏஎவ்சியின் இலச்சினை பொறிக்கப்பட்ட ரீசேர்ட் அணிந்த பணியாளர்கள் முழங்காலில் இருக்கச்செய்யப்பட்டனர், தங்களின் உயிர்களிற்காக அவர்கள் மன்றாடியவேளை நெற்றிப்பொட்டில் சுடப்பட்டனர் என தெரிவித்துள்ள ருத்ரகுமாரன் ஏசிஎவ் படுகொலை தொடர்பில் இதுவரை எவரும் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகளின் முன்னாள் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட சார்லஸ் பேட்டிரை தலைமையிலான இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பான ஐக்கியநாடுகள் நிபுணர்கள் குழு தனது அறிக்கையில் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதி தருணங்களில் 70,000க்கும் மேற்பட்ட பொதுமக்களிற்கு என்ன நடந்தது என்பதுதெரியாத நிலை காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளதையும் யுத்த குற்றங்கள் மனித குலத்திற்கு எதிரான இழைக்கப்பட்டமைக்கான நம்பகதன்மை மிக்க ஆதாரங்கள் உள்ளதாகவும் தெரிவித்துள்ளதையும் நாடு கடந்த தமிழ் ஈழத்தின் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்மக்களிற்கு எதிராக இனப்படுகொலை இடம்பெற்றது என ஜேர்மனியின் தீர்ப்பாயம் தெரிவித்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2015ம் ஆண்டின் ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானம் சர்வதேச நிபுணர்களின் பங்களிப்புடன் விசாரணைகள் மற்றும் வழக்கு தாக்கலை முன்னெடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளதையும் பிரான்ஸ் ஜனாதிபதிக்கான தனது வேண்டுகோளில் சுட்டிக்காட்டியுள்ள ருத்ரகுமாரன் இது இலங்கையில் வலுவான உள்நாட்டு பொறிமுறை இல்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவருடம் முன்னாள் ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் இலங்கை ரோம் பிரகடனத்தை அங்கீகரிக்கவேண்டும் என பரிந்துரைத்திருந்தார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதியை நிலைநாட்டுவதாக அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற இலங்கை தவறிவிட்டதாக குற்றம்சாட்டிய முன்னாள் மனித உரிமை ஆணையாளரும் 9 முன்னாள் விசேட அறிக்கையாளர்களும் ஐக்கியநாடுகள் செயலாளர் நாயகத்தின் நிபுணர்கள் குழுவும் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தவேண்டும் என பரிந்துரைத்துள்ளதையும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### வே.பிரபாகரனின் பிரேத...

ஆனால் தந்தையும், தாயும் யுத்தம் முடிந்ததாக அறிவிக்கப்பட்ட தினத்தில் இருந்து மூன்று நாட்களின் பின்னர் தான் அரசாங்கத்தின் பாதுகாப்பில் இருந்து எடுக்கப்பட்டார்கள். அவர்கள் இராணுவ தடுப்பு முகாமான பனாங்கொடையில் இருந்த போது அவர்களுக்கே தெரியாமல் அரசாங்கம் மாதிரிகளை பெற்றுக் கொண்டதா? அல்லது தந்தை இறந்த பின்னர் அவரின் உடலில் இருந்து மாதிரிகள் எடுக்கப் பட்டதா? அதேபோல் வைத்தியசாலையில் இருந்த போது அவரின் தாயாரின் மாதிரிகளும் அவர்களுக்குத் தெரியாமல் பெற்றிருக்க முடியும். வே.பிரபாகரனின் தாயார் 2011 ஆம் ஆண்டு மாசி மாதம் 20 ஆம் தேதி காலமாகியிருந்தார்.

அவருடைய தகனக்கிரியைகள் 22 ஆம் தேதி நடைபெற்றது அன்று நள்ளிரவு வேளை சிதையிலே இருந்த அவரின் அஸ்திகளின் மேலே நான்கு நாய்களை இராணுவத்தினர் சுட்டுப் போட்டு கோரதாண்டவத்தை ஆடிச் சென்றிருந்தனர். அப்போது வேண்டுமென்றால் தாயாரின் அஸ்தியைக் கூட எடுத்துச் சென்று இருக்க முடியும்.


இவ்வாறான நிலைமையிலே வே.பிரபாகரனின் மாதிரிகளை நாங்கள் எடுத்து வைத்துள்ளோம். அதை அவருடைய தந்தை அல்லது தாயாரின் மாதிரிகளுடன் ஒப்பிட்டு உறுதிப்படுத்தினோம் என்று சொல்வதற்கும், தேசிய பாதுகாப்பிற்கு குந்தகம் என்பதற்கும் என்ன தொடர்பு உள்ளது? அரசாங்கம் பச்சைப் பொய் சொல்கின்றது. ஒரு பிரேத பரிசோதனை நடத்தப்பட வேண்டும் என்றால் சட்டவைத்திய அதிகாரி முன்னால் தான் நடத்தப்பட வேண்டும். ஆனால் அவ்வா றான ஒன்று நடந்ததாக அரசாங்கம் இதுவரை கூறவில்லை. அதைவிட ஒரு நீதிபதி முன்னால் தான் மரண விசாரணை நடைபெற வேண்டும். நீதிபதி தான் பிரதேச பரிசோதனை நடத்துவதற்கான உத்தரவைவழங்க வேண்டும். அவ்வாறான எதுவும் இங்கு நடக்க வில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்து சென்ற முன்னாள் கிழக்கு மாகாண தளபதி விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் ஊடகப் பேச்சாளருமான வேலாயுதம் தயாநிதி (தயா மாஸ்டர்) இருவரையும் இராணுவ உலங்கு வானூர்தி மூலம் கொண்டு சென்று காட்டியவர்களுக்கு ஒரு நீதிபதியையும் அல்லது ஒரு சட்ட வைத்திய அதிகாரியையும் அழைத்துச் செல்வதற்கு அரசாங்கத்திற்கு என்ன தடை இருந்தது?

தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிப்புச் செய்வது உட்பட அரசாங்கம் நினைத்தவற்றை செய்வதற்கு தேசிய பாதுகாப்பு என்ற வார்த்தையை பயன்படுத்துவது போல் வே.பிரபாகரனின் விடயத்தையும் மூடி மறைப்பதற்காக திட்டமிட்டு தேசிய பாதுகாப்பு என்பதை நாட்டின் பாதுகாப்பு துறையும், படைத்துறையும் பயன்படுத்தியுள்ளது என்பதே உண்மை என்றார்.

## தமிழர்கள் வசிக்கும் பிரதேசங்களில் விகாரைகள் கட்டுவதையே தமிழர்கள் எதிர்க்கின்றனர் :

### - அருட்தந்தை சக்திவேல் -



தமிழர்கள் மட்டும் வசிக்கும் பிரதேசங்களில் விகாரைகளையும், தூபிகளையும் கட்டுவதையே தமிழர்கள் எதிர்க்கின்றனர் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் வியாழக்கிழமை (22) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தெற்கில் தமிழர்களுக்கு எதிரான இனவாத கருத்துக்களை கக்குவதற்கும் அதனை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும் அமைச்சும், அமைச்சர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்களோ என்று சிந்திக்க தோன்றுகின்றது.

மீண்டும் மீண்டும் தமிழர்களுக்கு எதிராக, தமிழர்களின் அரசியலுக்கு எதிராக, மரபுரிமை சார்ந்த தமிழர்களின் கொள்கைக்கு எதிராக கருத்துக்கள் வெளிப்படும் நிலையில் தற்போது அரசு சார்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ”பௌத்தர்களின் எழுச்சியை அடக்க முடியாது. பிரபாகரன் போன்று செயல்பட வேண்டாம். தெற்கில் தமிழர்கள் சுதந்திரமாக வாழ்கிறார்கள். வடக்கு தமிழர்களால் பௌத்தர்களுக்கு ஆபத்து வந்து விட்டது” எனக் கூறி தெற்கின் சிங்கள பௌத்தர்களை உசுப்பேத்தி விடும் செயற்பாட்டில் இறங்கியுள்ளார்.

இது வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும். தமிழர்களுக்கு எதிரான அடுத்த வன்முறையை குருந்தூர் மலையிலா? திரியாயிலா? அல்லது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூற்றுகளில் இருந்தா? ஆரம்பிப்பது என யோசிப்பது போல் தோன்றுகின்றது.

இத்தகைய வன்முறையை தூண்டும் கருத்துக்களை அரசு தரப்பினரோ, எதிரணியில் தமிழர்கள் அல்லாத எவரும் கண்டிக்கவும் இல்லை. சமய அமைப்புகளும் இவ்வாறான கருத்துக்களுக்கு மௌனம் காப்பது இவர்களும் இதனை ஆதரிக்கின்றார்களோ? என்று கேட்கவும் வைகின்றது.

யுத்த காலத்தில் ஆயுதப்படைகள் தமிழர்களின் பூமியை ஆக்கிரமித்தது போன்று ஆயுதம் மௌனிக்கப்பட்ட நிலையில் சிங்கள பௌத்த கருத்தியல் கொண்ட வனஜீவராசிகள் திணைக்களம், வனவள பாதுகாப்பு திணைக்களம், தொல்லியல் திணைக்களம் என்பன ஆக்கிரமிப்பு வேலைகளை தீவிரப்படுத்தியிருப்பதோடு தமிழர் தாயகத்தில் காணப்படும் தொல்லியல் பெறுமதி வாய்ந்த இடங்களை எல்லாம் சிங்கள பௌத்தருக்கு சொந்தமான எனக்கூறி தமிழர் மரபுரிமையை மறுத்து சிங்கள பௌத்தத்தை நிலைநாட்ட முனைவது தமிழர்களையும் கொதிநிலைக்கு தொடர்ந்து தள்ளுகின்ற செயற்பாடாகும்.

அத்தோடு குருந்தூர் மலை ”சைவர்களுக்கும், தமிழ் பௌத்தர்களுக்கும் சொந்தமானது” என்பதை ஏற்றுக் கொள்ள மறுத்து குருந்தூர் விகாரை எனக் கூறி சிங்கள பௌத்தர்களை அணி திரட்ட திட்டமிடுவதோடு, நீதிமன்ற கட்டளையை மீறி இராணுவத்தினரின் துணையோடு விகாரை கட்டுவதையும், தமிழர்கள் அங்கீகரிக்கும் சர்வதேச தொல்லியல் ஆராய்ச்சி நிபுணர்களை சேர்ந்து ஆராய்ச்சி பணியை மேற்கொள்ள எந்த முயற்சியையும் மேற்கொள்ளாதது மட்டுமல்ல, யாழ்ப்பாண பல்கலைக்கழக துறைசார் பேராசிரியர்கள், மாணவர்களை சேர்ந்து தொல்லியல் ஆய்வுகளை நடத்த அனுமதிக்காது தமிழர் மரபுரிமையை இருட்டடிப்பு செய்ய நினைப்பதையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

தமிழர்கள் ”உண்மையான பௌத்தத்திற்கும், சிங்களவர்களுக்கும், வேறு எந்த மதத்தவர்களுக்கும் எதிரானவர்கள் அல்ல” என திரும்பத் திரும்ப கூறினாலும் அது செவிடன் காதில் ஊதிய சங்கு ஆகவே உள்ளது. தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்வதையும், பௌத்தர்கள் இல்லாத இடங்களில் பௌத்த சின்னங்கள் வைப்பதையும், தமிழர்கள் மட்டும் வசிக்கும் பிரதேசங்களில் விகாரைகளையும், தூபிகளையும் கட்டுவதையுமே தமிழர்கள் எதிர்க்கின்றனர்.

மேலும் புராதன கால சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்களில் தமிழ் மன்னர்களின் ஆட்சி காலத்தில் கட்டிய சைவ கோயில்கள் உள்ளன. அங்கு அகழ்வாராய்ச்சி செய்து காணப்படும் தமிழர் மரபுரிமைகளையும், ஏனைய தொல்பொருட்களையும் அழிய விடாது பாதுகாக்காதது ஏன்? அனுராதபுரம், பொலன்னறுவை போன்ற இடங்களில் எத்தனையோ மரபுரிமை சார்ந்த இடங்கள் அழிவுகளும் நிலையில் உள்ளன.

அங்கு தொல்பொருள் திணைக்களம் தனது செயற்பாடுகளை மந்த கதியில் நடத்தி கொண்டு தமிழர் நிலங்களையும், மரபுரிமைகளையும், குருந்தூர் மலையிலா நீதிமன்ற கட்டளைகளை மீறி புதிய நிர்மாண பணியினை மேற்கொள்வதும் ஏன்? எனும் கேள்விக்கு நேரடியாக பதில் கொடுக்க மறுக்கும் சக்திகள் இனவாதத்தையும், மதவாதத்தையும் தூண்டி தம்மை மறைத்துக் கொள்ள பார்க்கின்றனர்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்து, வெளிநாட்டு கையிருப்புகளும் தீர்ந்துள்ள நிலையில், கடந்த காலத்தில் வாங்கிய கடன்களோடு, தொடர்ந்து கடன் பெறும் சூழ்நிலையில் வருமானமின்மை, பொருட்களின் விலையேற்றம் காரணமாக மக்கள் தெற்கின் கட்சிகளின் மீது நம்பிக்கை இழந்து விட்டனர்.

தேர்தல் நடத்தினால் எந்தவொருக்கும் தனித்து ஆட்சி நடத்துவதற்கு பெரும்பான்மை கிடைக்கப் போவதில்லை. எனவே தேர்தலுக்கு முகம் கொடுக்க மீண்டும் இனவாத சக்திகள் தமிழர்களை பலி எடுக்கத் தெற்கின் மக்களை தூண்டுகின்றனரா?

இவர்களோடு சேர்ந்து தமிழர் தாயகத்தின் ஒரு சில சுயநல விரும்பிகளும் தமிழர்களின் தேசியத்தை காட்டிக் கொடுக்கவும் அதற்கு எதிராகவும் செயல்படவும் துணிந்து விட்டது போல் தோன்றுகின்றது. 2009 இனப்படுகொலைக்கும் இத்தகையவர்களே காரணமாக இருந்தார்கள்.

இவரின் கை தற்போது ஓங்கி உள்ளது போல் தெரிகின்றது. இதனை தோற்கடிக்க வேண்டுமானால் தமிழர்களின் தேசியத்தை காக்கும் சக்திகள் வலிமை பெறல் வேண்டும். தமிழர்களின் அரசியல் உரிமைகளையும் மரபுரிமைகளையும் பாதுகாக்க சமூக சக்தியாக ஒன்று திரள்வதோடு பிராந்திய அரசியலுக்கு உட்படாது தனித்துவத்தோடு செயல்படுவதற்கான செயல்பாடுகளை தீவிர படுத்தினால் மட்டுமே நாம் சுதந்திரமாக வாழ முடியும் என்றார்.




# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |




## வெளிவரும்

**தேசியம் வாராந்த பத்திரிகையின் விளம்பர விலைப்பட்டியல்**

தேசியம் www.thesiyamnews.com THESIYAM තේසියම්

NEWSPAPER SIZES, RATE PER EDITION

### WEEKLY NEWSPAPER

| BLACK & WHITE ADVERTISEMENT | |
|---|---|
| Front Page Top | 2000/= |
| Front Page Bottom | 4000/= |
| Back Quarter Page | 6000/= |
| Back Half Page | 8000/= |
| Back Full Page | 12000/= |
| Inner Quarter Page | 3500/= |
| Inner Half Page | 6000/= |
| Inner Full Page | 10000/= |
| Inner Box Ad | 800/= |

| COLOUR ADVERTISEMENT | |
|---|---|
| Front Page Top | 4500/= |
| Front Page Bottom | 6000/= |
| Back Quarter Page | 8000/= |
| Back Half Page | 10000/= |
| Back Full Page | 22000/= |
| Inner Quarter Page | 5000/= |
| Inner Half Page | 8000/= |
| Inner Full Page | 15000/= |
| Inner Box Ad | 1200/= |

Tel : 021 222 7557 | +94 76 567 3339
E-mail : thesiyamnews@gmail.com
Web : www.thesiyamnews.com



இப்பத்திரிகை 23.06.2023 அன்று அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, வெளியிடப்படுகிறது.